KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ௵ ஜூன் ௴ 14௳ [No. 24

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 369

2. எதுவேண்டும்—(சிறு கதை)
P. இராமாநுஜன் 371

3. அப்பர் (64 கலை-இதிகாசம்-இராமன் கதை)
E. N. தணிகாசலமுதலியார் B.A. B.L. 375

4. தமிழ்ப் பாடம்
வில்லிபாரதம்—கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 376

5. கம்பராமாயணம் (கலன்காண் படலம்)
T. N, சேஷாசலம் B.A. B.L. 378

6. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை
(கிருஷ்ணா மாகேமி தோவபல்கு)
P. B. ஸ்ரீநிவாசாச்சாரியார் B.A. 381

7. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 7-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A. B.L. 382

8. வர்த்தமானம் 383

கலாநிலயம்

கல்சரை யடையும் வகை 1.

இவ்வாண்டின் 8-வது இதழ் முதற்கொண்டு கல்சரென்னுங் கருத்தில் கலந்துளகுணங்களை விளக்கிவரலாகின்றோம். கல்சராம் இத்தத்துவம் பெரும்பாலும் பிரம்மதேவனை யொத்திருக்கின்றது. முழுமுதற்கடவுளின் சித்தம் நிறைவேறுமாறு அவனின்றுதோன்றினோன் பிரமன்; கல்சரும் கடவுளை ஆதியாகவுடையது; அக்கடவுளினது கருத்து நடைபெறவேண்டுமென்ற நோக்கமே கல்சர்நிலையா மென்பது முன்னிங்குரைத்தவைகளால்விளக்கமாகிஇருக்கும். தன்னை யீன்றவம் முதல்வன் யாரெனத்தேடுவான் அமைந்தஅப்பிரமனைப்போல் கல்சரினது நாட்டமும் கடவுளைத்தேடியடைவதில் நிலைத்திருக்கின்றது. உயிர்களைப் படைக்கின்றோன் பிரம்மனெனின், அவ்வுயிர்களுக்கும் ஓர் உயிர் படைத்துத் தருகின்றது கல்சர்; கல்சரிலாதார் உயிர் வாழ்வாரென்பது வம்பேயாம். கலைமகள் கலந்த நாவால் மறைநெறி யோதுவான் அவ்வேதன். கல்சரும் நல்வாழ்விற்குரிய விதிகளைக் கவிதையென்னும் நாவே கொண்டு நவில்கின்றது. பாலும்நீரும் பிரித்துண்ணும் அன்னத்தை ஊர்வான் அயன்; பகுத்தறிவை உகைத்தே கல்சரும் படர்கின்றது. பதுமத்தை மேவிய அப்பிரமனைப்போல் கல்சரும், மாந்தர்தம் இதயமலரைத் தன திருக்கையாக வுடையது.

கல்சருக்கும் நான்குமுகமுண்டு. தன்னுடைய தன்மையைக் காட்டு முகமொன்று; கவிதையின் நலங்களைக் கேட்குமுக மொன்று; அகத்திருக்கும் இயற்கைகளை ஆயுமுக மொன்று; செய்வகை இனி யின்னதெனச் செப்புமுக மொன்று. இவைகளில்,கல்சரின் அவசியம், கல்சரும் கவிதையும், சுய கல்சர் என்ற பகுதிகளால்முதன்மூன்றும் நமக்குஅறிமுகமாயின. இனி இக்கல்சரை எல்லோரும் எய்துதற்குச்செய்யற்பாலன யாவை என்பதைத் தேர்ந்துரைக்க, எஞ்சிய முகத்தையும் எதிர்நோக்கியவ ராவோம்.

நம்முடைய இயற்கையம்சங்களாயிருக்கின்ற தருமசிந்தனை தெய்வசிந்தனை பகுத்தறிவு உறவின துவகை அழகினில்மகிழ்வு என்பனவற்றை, நம்பால் அமைந்துள்ள சுயவாராய்ச்சிச் சக்தியால் தேர்ந்துஅவ்வவற்றின் தன்மை நிலை வேறுபாடு இயக்கம் முதலியவைகளையுணர்ந்து அவ்வவை தத்தம் இயற்கை மாறாமலும் முதல்வன்மை சிதையாமலும் நாளுக்குநாள் வளர்ந்து வரும்படி தம்வரையில் செய்துகொள்வதும்,மற்றவர்களுக்குச் செய்துவைப்பதும் இவையிவை யெனத் துணிந்துஅவ்வழியொழுகலே கல்சர்நெறியைக்கடைபிடித்ததாகும். இந்நெறி நடப்போர்க்கு வழித்துணையாயிருந்து, இடையூறு தளர்ச்சி அயர்வு முதலியவைகளை விலக்குவதற்கு உரிய உதவிகள் சில, கரந்திருந்தெதிர்க்கும் பகைகளைக் கடத்தற் குதவும் கருவிகள் சில, வழிவிலகி யலையாமல் செல்லுறு கதியிற் செவ்வனம் உய்க்கும் குறிகள் சில, ஆங்காங்கு இளைப்பாறுதற்கிருக்கின்ற தண்ணறுஞ்சோலையும் தெண்ணீர் வாவியுஞ் சில, இவர்களை நல்வரவு கூறி யழைத்து விருந்தாட்டியுவக்கும் இல்லறத்தோர் வாழ்கின்ற வளமனைகள் சில, இவையனைய பல கல்சருக்குக் கைதரும் சாதனங்களாம். அவைகளின் உண்மையையும் தன்மையையும் தெரிந்து கையாளுந் தாளாண்மையால் கல்சர் நிலை கைகூடும். ஆதலின் இவைகள்தாம் இருந்தபரிசு இன்னதென்னச் சிறிது நோக்குவோம். இவ்விடயங்

களின் எல்லை போமளவு உரைப்பதெனின் இதுமிகப் பரந்த நூலாய்விடும்; அடிப்படையாய் அமைந்துள்ள சிற்சில பாகங்களையே இங்குச் சுருக்கமாகக் கூறிட நினைத்துளோம்.

யாவற்றினும் முதலாகஉரைக்கவேண்டியதொன்று இச்செவ்வியில் உளது. சாதனங்களெல்லாம் திரண்டிருப்பினும், அவைகளைப் பயிலவல்ல முறைகளைத் தெருண்டவராயினும், கல்சரேகதியென்றவோர்முழுமுதல் நம்பிக்கை யில்லையேல் யாதும் பயன் எவரும் பெற்றிடார். தாமும் தம்மினமும் அல்லலில்நன்னிலை எய்துதற்குக் கல்சரன்றிப் பிறிதொரு வழியிலை என்ற நினைவுமாத்திர மல்லாமல்இக்கல்சர்யாவரும்அடைய வல்லதொன்றென்னும் நம்பிக்கையும் நிலைத்திருத்தல் இன்றியமையாதது. இந்த உறுதி ஓர் அசைவின்றி அமைந்திருந்தாற்றான் சாதனங்களைப் பயில்வதால் பயன் கைகூடும். இதுபற்றியே, அரசிய லியக்கங்கள், சட்டங்கள், பற்பல விதங்களாய சீர்திருத்த முயற்சிகள், தற்காலக் கல்விமுறைகள், கூட்டுறவுச்சங்கங்கள், கட்சிகள், கைத்தொழில் வர்த்தகங்களின் பெருக்கங்கள், அறவுரைகள், இவைகளனைய புறத்திருந்து நன்மைகளைப் புகுத்த முயல்கின்ற கருமங்கள் ஒன்றும் உலகத்தை ஒருபடிகூட உயர்த்தமாட்டாமைவெட்ட வெளியாயிருப்பதை, நம்முடைய கருத்தாலும், அரவிந்தர் இரவீந்திரநாதர் கார்லைல் எமர்ஸன் மாத்யூ ஆர்னல்ட் போன்ற மெய்யறிவுடைய மேலோர்களது பொருளுரைகளைப் பெயர்த்தெழுதியும், எமது தலையங்கங்கள் பற்பலவற்றில் தெளிவுபடச் செப்பியுள்ளோம். இவைகள் அனைத்தும் வெறும் சொற்றொடர் ஆரவாரங்களும், ஒருவரோடொருவர் இகன்றுஉழலும் சேற்றுநிலங்களும் ஆயினவேயன்றிஉற்றவொரு ஆன்மாவின் வறுமைதீர்க்கும் உதவிகள் ஆகவில்லை; ஆவதற்குரிய அம்சங்களும் அவைகள் அல்ல. தான் பின்னிழியத் தன்னிலைமைமுன்னடையவேண்டுமென முயல்தல் முறைபிறழ்ந்த முயற்சியென்பது மேனோக்கிற்குத் தென்படாதெனினும் விடயங்களை ஆய்ந்தறியும் பயிற்சி சிறிதேனும் உடையவர், சொல்லிக்காட்டிய பின்னேனும் தெரிந்துகொள்வது அருமையன்று. இவ்விதம், வேறு எவ்வழியாலும் வாய்ப்பதொன்றுமில்லை என எதிர்மறையாய் மறுத்ததோடமையாது, ‘கல்சரின் அவசியம்’ என்ற தலையங்கங்களில், மாந்தரினம் மாயவாழ்க்கைவிட்டுத் தம் ஆன்மாவை மாய்க்காது ஒளியும் இன்பமும் எங்கும் இயங்க விளங்கவேண்டுமெனின் கல்சரொன்றேஅந்நிலைபேறுடைய மாபெருநலத்தைச் சாதிக்க வல்லதென்பதை உடன்பாடாகவும் உரைத்தனம். மற்று, பண்டைநாள் இத்தேயம் இன்பமும் மேன்மையும் உற்றிருந்ததற்கு, எங்கெங்கும் யாவர்மாட்டும் கல்சரே பரவியிருந்ததென்பதை எமது இக் கொள்கைக்கு ஆதாரமாகப் பற்பல விடங்களில் கூறியபெற்றியும் நினைவில் இருக்கலாம். இக்கருத்துக்கள், கல்சரின் நன்மையை நினைத்திராதார்க்கு நம்பிக்கையும், நம்பியிருப்பவர்க்கு நிலையாய உறுதியும் நல்கும் நோக்கத்தின.

கல்சரைக் கைவிட்டால் வேறு கதியில்லை என்னும் உறுதியோடு அக் கல்சரை யாவரும் வேண்டுமெனின் எய்தவுங் கூடுமென்ற நிச்சயமும் இன்றியமையாதெனப் பின்னர்ச் செப்பலுற்றோம். ‘சுயகல்சர்’ என்னும் வரிசையில்வந்த தலையங்கங்கள் இந்நிச்சயத்தை நிலைக்கவைக்கும் நோக்கத்தை உட்கொண்டுள. கல்சருக்குரிய அம்சங்கள் அனைத்தும், மனிதராய ஒவ்வொருவரிடத்திலும் இயற்கையிலேயேஇருக்கின்றனவென்றால்,அவைகளை நாம்வேளாண்மை செய்யுமாறுசெய்தக்கால் செழித்தோங்கி வளருமென்பது சிறிதேனும் ஐவுறவெய்துதற் கொத்ததொன்றுஅன்று.இவ் வியற்கைகளாம் விதை உண்டு, மனமெனும் விளைநிலமும் உளது, பின் அது விளையாதவாறு சிதைகின்ற கொடுமை பெரிதேயன்றி,நிழலும்பழமுமாய் விளையலாவது அருமையோ அன்று. ஆதலினால், மாநுடரனைவரும் உலகடங்கலும் கல்சருடையவராதல் இயலும் என்னும் நம்பிக்கை, சிறிதே சிந்திக்குந் திறமுடையோர்க்கும் வந்தே தீரும்.

இவ்விரண்டும் நிச்சயமானபின்னரே அவ்வியற்கை விதைகளைக் கல்சரென்னும் நற் கற்பகத் தருக்களாக வளர்ப்பதற் கமைந்த சாதனங்களைப்பற்றி நினைப்பது முறைமையாதலால் அவைகளை இவ்வளவுவற்புறுத்த நேர்கின்றது. கடவுள் நமக்கு அளித்திருக்கின்ற இயற்கை யம்சங்களை வளர்த்தலே நமது முதலும் முடிவுமான கருமமும் கடமையும் ஆகும் என்ற திண்ணிய கருத்தினோடு கல்சரின் கைகளை இறுகப்பற்றி இருப்போர்க்கு எதுவும் ஏற்ற சாதனமாகும். அஃதிலாதார் கைக்கு எட்டிய சாதனங்கள் சிறந்தனவேனும் அது கொண்டு அவர் சாதிக்கவல்லது மிகச் சிறிதே. செல்வத்தால்,சொல்லித்தரும்உபாத்தியாயர்களால்,புத்தக நிலயங்களால், அமைந்த சாதனங்கள்சூழப்பெற்றும் ஆயிரமாயிரவர் சாதித்ததொன்றுமின்றியே வெற்றுநாள் கழித்துக்கழித்துத் தாமும் கழிந்துவிடக் காண்கின்றோமே. இதற்கெதிர், புறத்துணைகள் யாவுமின்றியும் உயர்பெரும்நிலைகளை எய்துவார்சிலர். இப்பின்னவர்க்கு ஊக்கம்இருந்தது,முன்னவர்க்கு இல்லையென்பதே இதன்காரணம். ஊக்கமுளதேல் உற்றசாதனங்களைக் தேடிக்கொள்வார்—கிடைக்காக்கால் படைக்கவும் படைத்துக்கொள்வார். மாபெரும் நோக்கமொன்றில் ஊன்றிய நோக்கமுடைமையே அரைப்பங்கு முடிவை அடைந்ததாகும்; அன்னவர்,இடையூறெல்லாம் எய்தாமற் கடந்துவிட்டனரென்றே கூறலாம். உயரிய நோக்கமும் அதனை எய்த இயலும் என்னும் நம்பிக்கையும் வாய்த்தவர்க்கு யாதும் அருமையில்லை. மேன்மேலும் நமதான்மா உயர்கதி அடையலாவதே இப்பிறவியின் பயனாகும் என்னுமவ்வுண்மை தொன்மொழியாய்மாத்திரம் நடமாடிக் கழிதலாகாது. வாய்விளம்புமொரு செய்தியாய் நிற்றலும் போதாது. நம் வாழ்க்கையின் மெய்ம்மை அதுவே என்ற நிச்சயம் நிலைத்திருந்து மனமொழிமெய் முழுதும் வியாபித்து இயங்குதல் வேண்டும். மெய்ந்நெறி நன்மையில் நிச்சயமுடைய இந் நம்பிக்கை, சேய்மைக்கண் திகழ்தரும் செம்மையினது முழுமையைச் சிறிதுசிறிது காட்சிகொண்டு,மாண்புடைய நம் முயற்சியால் உயர்ந்துவருகின்றோம் என்ற வாய்மை ஓரளவு தெரியவரவும் கருதிய கருமத்தில் உய்க்கின்ற ஊக்கம் நாளுக்குநாள் அதிகம்மிகுந்து மேன்மேல் நம்மை நிமிரச்செய்யும். இத்திறத்தினோர் தங்கள் கருமத்திற்குக் கடவுளும் கருணையால் கைதருவாரென்பதையும், ஆன்மா அழிவிலதாகையால், நினைத்தது முழுவதும் இப்பிறவியில் முடியாவிடினும் இங்குத் தாம் விட்ட அளவிலிருந்து பின்வரும் பிறவிகளில் தொடர்ந்துகொள்ளலாம் என்

பதையும் நினைக்குங்கால், அச்சத்தால் தளர்வதும், விரைவால் பதறுவதும் இலராய், புவனம் ஒன்றுபட வரினும் அசையா மனத்தவராய்த் தம்மரும் நிலையில் இமயமேபோலத் தண்மையே தலைக்கொண்டு உலகினை ஊட்டும் மாபெருங் கருணையாம் நதிகள் பெருகிப்பாய நிற்பவராவார்.

எனின், நம்முடைய முன்னேற்றத்தின் பொருட்டு நாம் உபயோகிக்கும் முறைகள் யாவற்றிற்கும் உயிரா யிருக்கவேண்டியது சுயகல்சர் எய்தவேண்டுமென்ற நோக்கமே. இந்தச் சுயகல்சர்நோக்கமும் மெய்யான நோக்கமா யிருத்தல்வேண்டும். இவ்வாறுகூறுவதால் குறிக்கப்படும்பொருள் என்னையோ வெனின், சுயகல்சரே நமது நோக்கத்தின் முடிவாக இருக்கவேண்டுமே யன்றி இக்கல்சரை ஒரு கருவியாகத்தான் கொண்டு வேறொன்று எய்துவதற் குளதென்னும் கருத்து இன்மையாம். மக்களுட்பெரும்பகுதியோரைப்பாழ்படுத்தும் இப்பிழையை வன்பொடு விலக்காவிடின், கல்சர் கல்சர் என்று சொல்லித்திரிவதால் விளைவதெல்லாம் விலக்கரிய தீமையேயன்றி வேறில்லை. கல்சர் என்றவார்த்தையை ஓயாமற்சொல்லிக்கொண்டு கலாசாலைகளை நிறுவுவோர் நாடுவோர் நடத்துவோர்களில், அதனால் தொழிலும் பொருளும் செல்வாக்கும் அடைவதே கண்ணுங்கருத்துமாயிருப்பவர் ஒருவரிருவரலர்; நூற்றுக்கணக்கிலுமடங்காது அவர்தொகை; ஆயிரத்திலுமமையாது; மிகுதிபற்றி அனைவரும் அன்னவரேஎன்றுமும் ஏற்கும். இவர்களெல்லாம் உண்மையில் கல்சரையடையநினைப்பவராகார். தமக்குப்புறத்ததாய்த்தம் முடைய இயற்கைக்கு அயலதாய் இருக்கும் சிலபொருள்களை தேடச் சென்றவர் என்பதில் ஐயமில்லை. இத்தகைய இழிய நோக்கம், கல்சரென்னும்பேரோடு வழங்கினும், இகலினால் உழலும் படுகுழி பாய்ச்சுவதல்லால் விண்ணிடை உயர்த்தும் விமான மாவதெங்ஙனம்? புறத்துள அண்டங்களும் நிகிலப்பொருள்களும் யாவும், தன் கையளவும் காணுதபடியாக்கும் பெருமைக்கு உரிய ஓர் தத்துவம் தன் அகத்தே உளது என்னும்நிச்சயமே முதலாகத் தொடங்குவது தான் கல்சரை மெய்யானநோக்கத்தோடு நாடுவதற்கு அடையாளமாகும். தான் தானேயாய் ஆவதற்குக் கல்சரைக் கடைபிடிப்பார் உத்தமர். தான், பிறிதின்கிழமையாய ஒன்றை அடையும்பொருட்டு விவகரிப்பதெல்லாம் கூலிக்குமாரடிக்கும் கொள்கையேயன்றிக் கல்சர் ஆகாது.

"எது வேண்டும்"

(ஒரு சிறு கதை)

[360-வது பக்கத் தொடர்ச்சி]

"தம்பி நீ இதுவரையில் பேருக்குத்தான் அழகுமலையாயிருந்ததாய்; இப்பொழுது நீ உண்மையிலேயே அழகுமலை" என்றார் ஒருவர். "அண்ணா, நீ மேலே தரித்திருக்கும் மேகவர்ணப்பட்டு எங்கே வாங்கியது?" என்று கேட்டார் மற்றொருவர். "இது மேகவர்ணப்பட்டல்ல; சாதா பருத்தித்துண்டுதான்; என் மார்பில்என்ன இருக்கிறதென்று தெரிகிறதா?" என வினவினன் அழகன். "தங்கச் சரட்டில் கற்கள் பதித்த பதக்கம் ஒன்று ஜொலிக்கிறது". "ஆம், உண்மைதான்; என் மார்பில் விளங்குகின்ற பதக்கத்தின் நடுவில் கோமேதகக்கல் ஒன்று பதித்திருக்கிறது; அதன் ஒளிதான் எனது வெள்ளைத் துணியை நீலவர்ணமாகச் செய்துவிட்டது". "இது என்ன புதுமை! நெற்றியில் தானே திருநீறு பூசுவது வழக்கம்; நீங்கள் கன்னத்திலெல்லாம் பூசியிருக்கிறீர்களே!"

"உங்களுக்கு எல்லாம் புதுமைதான்; எனது காதில் ஜொலிக்கும் கடுக்கனைப்பார்த்தீரா? வயிரக்கடுக்கன்! அதன் ஒளிதான் இந்தப் புதுமை"

"ஐயா, அழகுமலை; நீ சோமனுக்கும் ராமனுக்கும் உன் மாமனுக்கும், மோதிரம் சங்கிலி இன்னும் என்னென்னவோ நகைகளெல்லாம் கொடுத்திருக்கிறயே, எங்களுக்கு ஏதாவது ஒன்று கொடுக்கலாகாதா?"

"நான் அவர்களுக்கு எல்லாம் இலவசமாகக் கொடுத்தேனென்று நினைக்கிறீர்களா? நான் இந்த நகைகளின் பொருட்டு எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா? வேண்டுமானல் உங்களுக்கும் ஆளுக்கு ஒரு வைரமோதிரம் தருகிறேன். நீங்கள் இரண்டு வருஷம் வரை என் விருப்பப்படி நடப்பதாக எனக்கு முறியெழுதித் தரவேண்டும்."

"அப்படியே எழுதிக்கொடுக்கிறோம்" என்று கூறி வைர மோதிரங்களைப் பெற்றுக்கொண்டு முறியெழுதித்தந்தனர். இன்னவாறு அந்தப் புகழூர்மட்டுமன்றி அதற்கு அருகிலிருக்கும் பல கிராமங்களில் வசிப்பவர் அனைவருக்கும் அவரவர்கள் விரும்பிய நகைகள் பல கொடுத்து அவர்களைத் தனக்கு அடிமையாக்கிக் கொண்டு புகழ்மிக வாழ்ந்தான் அழகன்.

"தங்க நகைகளாம், வைர அணிகளாம்; கண்கொண்டு பார்க்கமுடியவில்லை அவற்றின் அழகை! எவ்வளவு பிரகாசம்! என்ன ஜொலிப்பு! புகழூர் வெள்ளையன் மகன் அழகுமலைக்கு வந்த அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்; மற்றவர்க்கு வந்ததெல்லாம் நஷ்டம்; நமக்கு அந்த நகைகள் இல்லாவிட்டாலும் அவற்றைப்பூண்டு கொண்டிருப்போரைப் பார்த்தாவது சந்தோஷப்படலாம்" என்றுபுகழூருக்கு நெடுந்தூரத்தில் வசித்தவர் அனைவரும் அவ்வூரில் வந்து குடியிருக்கத் தொடங்கினர். சில வருஷங்களுக்கு முன்பு, ஏன், சில மாதங்களுக்குமுன்புகூடச் சிற்றூராயிருந்த அந்தப் புகழூர் இப்பொழுது ஒரு பட்டினமாகிவிட்டது. அப்புகழூரைச்சுற்றிலும் கல்லும்முள்ளும் பரவிக்கிடந்த பிரதேசம் மாடமாளிகை கூடகோபுரங்களோடு விளங்குகிறது. நேற்றுத் தரிசாகக் கிடந்த இடம் இன்று பல வீடுகளோடு திகழ்கின்றது. அவ்வளவுபேரும் அழகுமலைக்கு அடிமைதான்! அவன் வாயை அசைத்தால் போதும், ஆயிரம்பேர் கைகட்டி நிற்பார்.

இப்பொழுது அழகுமலையை ஒருவரும் பெயர் சொல்லிஅழைப்பதில்லை; 'எஜமான்' அல்லது "பிரபு" என்றுதான் அழைப்பார்கள். அவனைப்பற்றிச் சில சமயம் பிறரிடம் பேச நேரின் "அழகேசன்" என்று குறிப்பிடுவது வழக்கம். அழகன் அழகேசன் ஆனவாறே அப்புகழூரும் அழகேசன் ஆணையால் "அழகாபுரிப்

பட்டினம்'' என்ற பெயரால் வழங்கப்படலாயிற்று. ''அழகாபுரி என்னும்பட்டினத்தில்அழகேசன்என்று ஒரு இராஜா இருந்தான்'' என்று யார்மூலமாகவாயினும் நீங்கள் கேள்விப்பட நேரின் அது புகழுரையும் அழகுமலையையுந்தான் குறிக்கும். உலகம் என்றும் ஒரே நிலையில் இருப்பதில்லை. முன்னொரு காலத்தில் இமயமலை நீரில் மூழ்கியும்,இந்துமகாசமுத்திரம்நிலப் பரப்பாயும் இருந்ததாம்! சில வருஷங்களுக்குமுன்பு தெருப்புழுதியில்அளைந்து, மரப்பாச்சியை வைத்துக் கொண்டு ''பாச்சிகுடி பாச்சிகுடி'' என்று மகிழ்ந்து விளையாடிய பேதைச்சிறுமி இன்று உண்மையிலேயே ஒரு பிள்ளைக்குத் தாயாக இருக்கின்றாள். காலம் மிக விரைவில் மாறிவருகிறது. நெடுந்தூரத்தினின்றுவந்து அழகாபுரியிலேயே குடியிருப்பதற்காகத் தங்கியபலர் ஒருநாள் அழகேசனையடைந்து பின் வருமாறு முறையிட்டார்கள்:—''பிரபுவே, இவ்வூரில் வாழும் அனைவரும் தாங்கள் தங்கள் அன்பின் அறிகுறியாக அளித்த மோதிரம், கடுக்கன் கடகம்அரைஞாண் அல்லது இவ்வகை ஏதாவதொன்றைஅணிந்திருக்கின்றார்கள். நாங்கள்மட்டும் பிறர் அணிந்திருப்பதைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சுவிடும் நிலைமையில் இருக்கின்றோம்; அவர்கள் எல்லாரும் தாங்கள் உவந்தளித்த நகைகளுக்காக அடிமைகள்போல நடிக்கின்றார்கள்; நாங்கள் ஒன்றுமில்லாமல் மனப்பூர்வமாக உங்கள் ஆணைக்கு மிக அடங்கி நடக்கின்றோம்; எங்கள்மீதும் சிறிது கிருபை காட்டவேண்டும்''.—இந்த முறையீடு அழகேசன் மனதைக் கனிவித்தது. ஆனால் அவனுக்கென்றிருந்த சிலநகைகள் தவிர அனைத்தையும் பிறர்க்கு முறியெழுதிக்கொண்டு கொடுத்துவிட்டான். ஆகவே இவர்கள் ஆசையைப் பூர்த்தி செய்வது எப்படியென்று தயங்கினன். அச் சமயம் அவனுக்கு உற்ற தோழனும் அவ்வப்பொழுது யுக்தி போசனை கூறுபவனும் ஆன வயிரமுத்து என்பவன் ''இவர்களுக்குக்கொடுக்க நம்மிடத்தில் நகைகள் இல்லையென்று நீங்கள் கவற்சியுறவேண்டாம்.முன்னேமுறியெழுதித் தந்து நம்மிடத்தில் நகைகள் வாங்கிக்கொண்டுபோனவர்களின் காலாவதிக் கணக்கைப்பார்த்து அவற்றை வாங்கி இவர்களிடம் சேர்ப்பித்துவிடலாமே'' என்றான்.

''அப்படிச் செய்தால் அவர்களை நமக்கு அடிமையென்பதனின்று விடுவித்ததுபோலல்லவா ஆகும்?''

''பதினயிரக்கணக்கான ஆட்படைகளுள்ள நம்மை அலக்ஷியம் செய்து அவர்கள் எங்கிருந்து வாழமுடியும்? இனி நாம் யாருக்கு என்ன கொடுத்தாலும் முறியெழுதி வாங்கவேண்டியதில்லை; அப்படிச்செய்தால் எழுதித்தராதவர்கள் நமக்கு அடிமையல்லரென்று பொருள்படும்.''

''ஆம், நீ சொல்வது நல்ல யோசனைதான்'' என்று கூறி மறுநாள் பலரை யழைப்பித்து, அவர்களிடம் கொடுத்த நகைகளை வாங்கி மற்றவர்களுக்குக் கொடுத்துவிட்டான். இதனல் சிலபேருக்கு அழகேசனிடம் வெறுப்பு மிகுந்தது. எனினும் அவனுடைய அதிகாரத்திற்கும் ஆணைக்கும் அஞ்சி வாயொடுங்கிச் சென்றனர். பின்பு சில நாட்கள் கழித்து வேறு சிலர் தங்களுக்கு ஏதேனும் ஆபரணங்கள் கொடுத்தருளவேண்டும் என்று விண்ணப்பம்செய்தனர். அவ்விண்ணப்பத்திற்கு இணங்கமாட்டாமல் அழகேசன் தன்பால் இருந்தனவெல்லாம் செலவழிந்துவிட்டன என்று கையை விரித்துவிட்டான். அவர்கள் மனம் ஒடிந்து முகம்வாடிச் சென்றனர். பொன்நகைகளும் இரத்தினாபரணங்களும் தமக்கு இல்லாமையால் மனக்கசப்பும் வெறுப்பும் உடையசிலர் பிறரிடமிருந்த நகைகளை அவர்கள் அறியாதவாறு கவரும் முயற்சியில் தலைப்பட்டனர். இதனால்அழகாபுரிப் பட்டினத்திலும், அதனையடுத்த சிற்றூர்களிலும் சண்டையும் சச்சரவும் ஓயாமல் விளைந்தன. ஏற்கனவே அழகேசனிடத்துவெறுப்புக்கொண்டிருந்தசிலர் தமக்கு உறுதுணையாக வேறு சிலரையும் கூட்டாளிகளாகச் சேர்த்துக்கொண்டு வந்தனர். தீமூட்டவேண்டியதற்குரிய சாதனங்கள் எல்லாம் ஆயத்தமாகிவிட்டன. இனி தீவைப்பதுதான் தாமதம். அப்பொழுது இப்பகைமைத் தீ கொழுந்துவிட்டெரியும் பயங்கரக்காட்சிஎத்தகையதென்பதுகற்பனாசக்தியையும் கடந்து நிற்பதாகும்.

* * *

கலைமகள் புரம் என வழங்கப்படினும் ''தேனூர்'' என்ற அந்தப் பழைய பெயர்தான் அவ்வூருக்குமிகப் பொருத்தமும் அழகுமானது. இப்பொழுது அந்த வூரின்கண் தேனும் பாலும் ஆறுப் பெருக்கெடுத்து ஓடுகின்றது. ''ஏகம்முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி ஆகும் முதற்றிண் பணைபோக்கி யருந் தவத்தின் சாகந்தழைத் தன்பரும்பித் தருமம் மலர்ந்து போகங்கனியொன்று பழுத்தது போலும்''—(யாவற்றிற்கும் தனிமுதலாகிய கல்வி முளைத்து, அம்முளையானது அளவற்றகேள்வியறிவென்னும் அடிமரமாக வளர்ந்து, அதனிலிருந்து அருமையான தவம் ஆகின்ற இலைகள் தழைத்து, அன்பாகிய அரும்புகள் தோன்றி, அந்தஅன்பானது தருமம் என்னும் மலர்களாக மலர்ந்து, அம்மலர்,இன்பப்பழமாகப்பழுத்ததைப்போன்ற கலைமகள்புரத்தில் தெய்வத்திருவருள் தேனாய்ப் பலாய்ப் பெருக்கெடுத்து ஓடுகின்றது. கலைமகள்புரத்து வாசிகள் அன்புநிறைந்த நெஞ்சினராய், புன்னகை தவழும் முகத்தினராய், அமைதிநிறைந்த வாழ்க்கை நடத்திவருகின்றனர். வேலைக்காலங்களில் பகல் முழுவதும் உழுதல், பயிர் நடுதல், நீர்பாய்ச்சுதல், களைபிடுங்குதல் முதலிய தொழில்களைச் செய்து மாலைநேரத்தில் வீட்டிற்குத் திரும்புவார். அப்பேரூரின் தொழிலாளர்களாகிய கொல்லன், தச்சன், வண்ணான், அம்பட்டன், சேணியன், தட்டான் ஆகியஅனைவரும் தத்தம்தொழில்களை முறைவழுவாமற் செய்து வந்தனர். இரவில் ஊரம்பலத்தில் மக்கள்பலர் கூட்டமாய்அமர்ந்து கம்பன் கவிநயத்தையும், எம்பெருமானது கல்யாண குணலங்காரங்களையும், கருணைவிலாசத்தையும் பேசிப் பேசி மகிழ்வார். வேறு பலர் பிறிதோரிடத்தில்குழுமியிருந்து வள்ளுவரின் வாழ்க்கைத் தத்துவங்களை எடுத்துப் பேசி, அவர் அருளிய அருங்குறளை ஆராய்வார். மற்றொரு தெருவில் நளன்கதை, அரிச்சந்திரன் கதை முதலியவற்றை இனிது படித்துக் கொண்டிருப்பர். வேறொரு வீதியில் ஆழ்வார் நாயன்மார் அருளிய அதிஅற்புத பாசுரங்களைப் பண்ணோடு பாடி மகிழ்வார். எப்பொழுதும் கர்மாவையே செய்யும்படி தூண்டும் மாமிச பிண்டமாகிய இச்சரீரத்திற்கும், கர்மாவைவிட்டு விலகிப் பரமபதத்திலே இறைவனுடைய முகோல்லாசத்தையே கண்டு மகிழ்ந்திருக்க விரும்பும் ஆத்மாவுக்கும் அபிவிருத்திக்குரிய சாதனங்களில் அவ்வூர்வாசிகள் ஈடுபட்டிருந்தனர்.

தேனூர் என்னும் அச்சிற்றூர்'' கலைமகள் புரம்'' என்ற மாறுபெயரோடு பேரூராகத் திகழ்வதற்குற்ற காரணம் ஒருவாறு உங்களுக்குத்தெரிந்திருக்கலாம். அன்று தேனூருக்கடுத்த மைதானத்தில் நிலவொளியில் தன்னை ஒருவரும் விளையாட்டில் சேர்த்துக்கொள்ளவில்லையென்பதற்காகஅழுதுகொண்டிருந்த முருகன் என்ற அச் சிறுவன்தான் காரணம். ஆனால் இப்பொழுதுஅவன் சிறுவனாகஇல்லை. அவனை முருகன் என்று எவரும் அழைப்பது மில்லை. "முருகையன்'' என்றே அழைக்கப்பட்டான். அறிவிலும் அநுபவத்திலும் மேம்பட்ட பெரியோர்கள் "முருகேசன்'' என்ற செல்லப் பெயரால் அழைப்பார்கள். இவ்வாறு முருகேசனின் பெருமையும் கலைமகள்புரத்தின் கீர்த்தியும் காதத்திற்குக் காததூரம் பரவலாயின. "வேதாந்த சாகரமாம், இலக்கிய இலக்கண சிகாமணியாம், அன்புவடிவாம், சாந்த மூர்த்தியாம், முருகேசன் என்ற திருநாமம் உடையவராம், எவர்க்கும் எந்த நேரத்திலும் வித்தியாதானம் செய்துவருகின்றாராம்,ஒரு சிறிதும்ஒருவரிடத்தும்பிரதிப்பிரயோஜனம் கருதுவதில்லையாம்'' என்று அளவிறந்த மக்கள் அக்கலைமகள் புரத்திற்கு வந்து நிலையாயிருக்கத் தொடங்கினார்கள். முருகேசனும், அவனிடத்துக் கல்விபயின்று அறிவு நிறைவுபெற்றவரும் புதிதுபுதிதாகஎவ்வளவுபேர்கள் வரினும் அத்துணைபேருக்கும் கல்வியளித்துச் செம்மைநெறி காட்டிவந்தனர். செம்மைநெறிகாட்டினாற் போதுமா? மானம் குலம் கல்வி வண்மை யறிவுடைமை, தானம் தவம் முயற்சி தாளாண்மை தேனின், கசிவந்த சொல்லியர்பால் காமுறுதல்பத்தும், பசிவந்திடப் பறந்துபோம் என்பர் அல்லவா? செவிக்குணவு கிடைத்து என் செய்ய? வயிற்றுக்குணவு வேண்டாவோ? இப் பரந்த பூமியில் எங்கெங்கே சிதறிக்கிடந்த கிராமவாசிகள் எல்லோரும் கல்விகல்வியென்று வந்து கூடிவிட்டால் அவர்கள் தம்பசி யாற்றிக்கொள்ளற்கு என்னவழி செய்துகொண்டனர்? என்று இவைபோன்ற சிந்தனை இயல்பாக நமக்குத் தோன்றக்கூடியதாயினும், முருகேசனால் அறிவு கைவரப்பெற்ற அந்தக் கலைமகள்புர வாசிகளுக்கு அதைப்பற்றிய கவலையில்லை. தன்னை நம்பிச் சேவிப்பவர்க்கு உண்டிகொடுத்து உடையுங்கொடுத்துக் காப்பாற்ற என்றும் ஆயத்தமாக இருக்கின்றாள் நிலமகள். பரந்து கிடக்கும் பசும்புற் பிரதேசத்தைச் சீர்திருத்திப் பயிர்செய்து பசியாறினர் பலர். மெய்வருந்திப்பயிர்செய்ய இயலாதவர்க்கு உணவுகொடுக்கநான்முன் நீமுன் என்றுபோட்டிபோட்டுக்கொண்டு வருபவர்பலர். "பசியா? என்னபிரமாதம்! கனியேனும் இனிய செங்காயேனும் உதிர் சருகு கந்தமூலங்களேனும் உண்டால் பசியாறிவிடுகின்றது'' என்று மிக அலட்சியமாகப் பேசுவார் அவ்வூர் வாசிகள்! ருசிக்காக உண்ணவேண்டுமே தவிரப் பசிக்காகக் கண்டதையெல்லாம் வாயிற் போட்டுக்கொள்வ தென்பது அநாகரிகம்என்கின்ற தற்கால சித்தாந்தத்தை, பாவம், அவர்கள் அறிந்துகொள்வதற்கில்லை!

ஒருநாள் அவ்வூர்ப் பெருந்தெருவொன்றில் ஒரு வாலிபன்தன்தலையில் ஒருசிறிய சுமையோடு"பொன் நகைகள் வேண்டுமா? வயிர அணிகள் வேண்டுமா?'' என்று கூவிக்கொண்டு வந்தான்.மங்கையர்களும் வாலிபர்களும், இளைஞர்களும், முதியவர்களுங் குழுமி அவ்விளைஞனைச் சூழ்ந்துகொண்டு, "எங்கே,அவைகளைக்காண்பி பார்க்கலாம்?'' என்றனர். அவன் தனது சுமையைக் கீழே இறக்கிவைத்து அவிழ்த்தான். சுற்றியிருந்தவர்தம் கண்கள் கூசும்படி ஒளியும், நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் வனப்பும் வாய்ந்தஅணிகலன்கள் பலவற்றைக் கண்டு வியப்போடு பிரமித்து நின்றனர். "இவற்றைநாம் என்னசெய்வது?'' என்று வியப்போடு கேட்டான் ஒரு சிறுவன். "என்ன செய்வதா? சிறுவனாகிய உனக்கு இதன் உபயோகங்கள் எப்படித்தெரியும்? இளமையில் அருவருக்கத்தகுந்த விகார ரூபத்தோடு இருந்த நான் இப்பொழுது எவ்வளவு அழகாயிருக்கிறேன் பார்! என் காதில் விளங்கும் வயிரக்கடுக்கனும் கையில் ஒளிரும் பொன் சங்கிலியும், விரலிற் பொலியும் மோதிரங்களும் என்வடிவை அழகுறச்செய்தன'' என்றான் அவன்.

"வெளி அழகால் என்ன பயன் ஐயா? இறைவன் அளித்துள்ள இயற்கையழகினும் அது உயர்வுடையதா?''

"இயற்கையழகு உயர்வுடையதுதான்! ஆனால்அது நிலைத்திருப்பதில்லையே; நறுமணமும் சீரியவனப்பும் வாய்ந்த தாமரை மலர் சிறிது பொழுதில் நெஞ்சையள்ளும் அழகையிழந்து சோர்வடைந்துவிடுகிறதல்லவா? நமது உடலின் அழகும் அப்படித்தான். இளமை நீங்குமாயின் காண்போர் அருவருக்கத் தகுந்த வடிவினராவோம்; ஆண்டவன் நமக்கு அளித்துள்ள இயற்கை யழகு சிறிதுகாலம் வரைதான் நிலைத்திருக்கும். இளமை யென்னும் தெய்வ அழகு இறைவன் நியதிப்படி மறைந்தொழியினும் நமது மதிநுட்பத்தினால் காண்போர் மகிழும் வண்ணம் செயற்கை யழகு பெற்றுவாழலாம். அதற்குஏற்ற சாதனங்கள் இவை! அணி (அணிதற்குரியது - அழகுடையது) என்றஅப்பெயரே எனது கொள்கையை வலியுறுத்தும் சான்றாகும். உங்களில் எவருக்காவது இவற்றுள் ஒன்றேனும் தேவையில்லையா ?''

மீண்டும் அச் சிறுவன், "செயற்கையழகு மட்டும் நிலைத்திருக்குமா ? உடல் அழிந்துபோகும்பொழுது நமது மதிநுட்பத்தினால் புனைந்துவைத்த செயற்கையழகு என்ன பயன் தரும்?'' என்றுகேட்டான்.

"தம்பி, நீ மிகச்சிறியவனாகக் காணப்படினும் உன் பேச்சுத்திறமை சாலவியத்தற்குரியதாயிருக்கின்றது. உடம்பு அழிவதாயினும் அதுவரை உடலில் பருவ வேற்றுமைகளால் இயல்பாகவே ஏற்படுகின்ற விகார ரூபத்தை அணிகள் மறைத்துவிடுகின்றன அல்லவா? அழியும்வரையில் இவ்வுடலை அழகுடையதாக வைத்திருப்பதால் உண்டாகும் நன்மை யாதோ என்று நீ மறுபடியும் கேட்பதற்குமுன்பு யானே சொல்லிவிடுகிறேன்; ஒருவன் சிறந்த புத்திசாலியாக இருக்கிறான்; ஆனால் விகார வடிவையுடையவன்; மற்றர் அவனைப் பற்றி 'நல்ல அறிவாளி, ஆனால் பார்க்கச் சகிக்காது' என்று கூறுகின்றனர். இந்தக் குறை நீங்கவேண்டுமாயின் இந்த அணிகள் இன்றியமையாதன ஆகும்'' என்றான் வாலிபன்.

அக்கூட்டத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு மங்கை நல்லாள் அத் தங்கநகைகளின்மீது விருப்பமுற்று, "ஐய, இவ்வணிகளில் ஒன்று எனக்குத் தருவீரா?'' என்று கேட்டாள். "தருவேன், அம்ம; ஆனால் இருவர் ஒருவருஷம்வரை அறுசுவையோடுஉண்ணத்தக்க பொருள்கள் இவ்வொரு நகைக்கு ஈடாகத் தருதல் வேண்டும்'' என்றான் அவன்.

"இவ்வொரு நகைக்கா?"

"ஆம்."

"அப்படியானால், நீங்கள்வைத்திருக்கிற நகைகள் முழுவதையும் இத்தகைய ஊதியம் பெற்றுக்கொண்டுதான் கொடுப்பீரோ?"

"இத்தகையஊதியமென்றில்லை; யான் இடும் ஏவல்களைச்செய்ய ஊழியராக இசையினும் கொடுப்பேன்"

"நல்லது உணவுப் பொருள்களையும் ஊழியரையும் வைத்துக்கொண்டு என்ன செய்யலாமென்று கருதுகிறீர்?"

"மீகாமனில்லாத மரக்கலமும் தலைவனில்லாத நாடும் நல்ல நெறியறிந்து நடக்கவியலாது; ஆதலின் பல கிராமங்களுக்கு யான் ஒரு தலைவனாக இருந்து அவற்றைச் செம்மைபெற நடத்தலாம் என்பதல்லது வேறே நினைக்கவில்லை."

"இப்பேரூரும் இதனையடுத்த வேறு பல சிற்றூர்களும் தாமே விரும்பி ஒருதலைவரை ஏற்றிருக்கிறது; ஆதலினால், உமது தலைமையை விரும்புவார் இங்கு எவருமில்லை"

"விரும்புவாரில்லையா ; ஆயின், அத் தலைவர் யாவரோ?"

"அறியீரா அவரை? எண்டிசையும் புகழ் விளங்க இருந்தருளும் முருகையரை அறியீரா!

"கேள்வியளவில் அறிந்திருக்கின்றேன்; இப்பொழுது அவரை நேரேசென்று பார்க்கின்றேன்"என்று கூறி முருகேசன் வாழ்கின்ற சிறுகுடிலை யடைந்தான். இவனைக் கண்டவுடன் வரவேற்றுப் பெரிதும் உபசரித்து நலம் வினவினான். "அழகாபுரியென்றும் அழகேசன் என்றும் நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம்;அந்த அழகாபுரிவாசிகளை அதிகாரத்தாலும் அன்பாலும் அடக்கி ஆட்சிபுரிந்துவந்த அழகேசன் என்பவன் யான்தான்.இதோபாருங்கள் இங்குப் பேரொளிவீசும் பொன் அணிகள்! இவைகளே எனக்கு அத்தகைய அரும் பதவியைக்கொடுத்தன; அவ் வுயரிய பதவியை நான் இழந்ததற்கும் இவைதான் காரணம்! இவை போன்ற எண்ணிறந்த நகைகள் என்பால் இருந்தன; அவற்றிற் பெரும் பகுதியைப் பலர்க்கு வழங்கி எனக்கு அடங்கி நடக்குமாறு செய்துவந்தேன். ஆனால் மேலும் மேலும் வந்துகொண்டிருந்த கணக்கற்ற மக்களின் விருப்பை நிறைவுசெய்ய என்னிடம் நகைகள் இல்லை; அதனால் என்மீது வெறுப்படைந்த அவர்கள் என்பாலிருந்த அணிகலனைக் கவரவும், என்னைக் கொல்லவும் முயன்றனர். அஃதுணர்ந்த யான் என்னிடம் எஞ்சியிருந்த சிலவற்றை யெடுத்துக்கொண்டு பிறர் அறியாத வண்ணம் மறைந்துவந்து உயிர்தப்பினேன்; தங்கள் அன்பின் சிறப்பையும் பெருங்குணத்தையும் கேள்வியுற்றுவந்தேன்; இவற்றை நீங்கள் எடுத்துக்கொண்டு தங்கள் அன்பை யெனக்குப் பரிசிலாக அளியுங்கள்"என்று தன்னுடைய வாழ்க்கைவரலாற்றைக் கூறினான் அவ்வாலிபன்.

"அன்பரே, இவைகள் என்றும் குறைவுடையனவே; உணவுப் பொருள்களாயிருப்பினும் மக்களின் பசியாற்றப் பயன்படும்; இவை தம்மை வைத்திருப்போர்க்குத் துன்பமே தரவல்லன. வெளியழகை நாம் விரும்புவோமாயின் இறைவன்நமக்கு எளிதிற்கிடைக்கும்படியமைத்துள்ள நறுமணமிக்க அழகியமலர்களைக் கொய்து சூடிக்கொள்ளலாமே. அவை நமக்கு அழகு தருவதோடு மணமும் தரும். ஓவியத்தைக்காட்டிலும் உயிருள்ளது சிறந்ததல்லவா? முல்லையரும்பு போன்ற வயிரமிழைத்த ஒரு நகையைச் சூடிக்கொள்வதினும் முல்லைமலரையே கோவையாகத்தொடுத்து அணிந்துகொண்டக்கால் எவ்வளவு சிறப்பாயிருக்கும்! சிறிது பொழுதில் முல்லைமலர் வாடிவிடும் என்பீர்;உண்மைதான்;ஆயினும் அது இருக்குமளவும் வாசனைபெற்றிருக்கின்றதே!ஆதலின் இவை எனக்கும் வேண்டாம், உமக்கும் வேண்டாம்; இன்னொரு பொருள் இருக்கிறதே, அதை நீர் அறிவீரா? அது எத்துணை பெயருக்கு அள்ளியள்ளி வழங்கினும் குறையாது; மணற்கேணியைத் தோண்டுமளவு நீர் பெருகுவதைப் பார்திருப்பீர்; அந்தப் பொருளும் பிறர்க்குக் கொடுக்குந்தோறும் வளர்ந்துகொண்டே யிருக்கும்!" என்றான் முருகையன்.

"அது என்ன பொருள்? தயவுசெய்து எனக்குக் காட்டுங்கள்" என்று வியப்போடு கேட்டான் அழகேசன். "அது புறக்கண்ணால் பார்க்கக் கூடியதன்று; மனக்கண்ணால்தான் அதனைக் காணமுடியும்; மற்று, அதனைப்பெற்றதும் முன்புபோலவே எல்லாரையும் அடக்கி ஆண்டுவரலாமென்று நினைத்துவிடாதீர்.அது உம்மையே பிறருக்கு அடங்கி நடக்குமாறு செய்யும் - ஆயினும் அவ்வடக்கத்தினால் பெறுகின்ற இன்பமோ அளவிறந்ததாகும்; அதுதான் ஐயா, கல்வி!" என்றான் முருகையன்.

"ஐயனே, நான் ஒரு கணம் அப்படிநினைத்தது உண்மையே; எனினும், இந்நகைகளால் நேரும் துயரங்களைச் சிந்திக்கையில் தாங்கள் அளிக்கவிரும்பும் கல்வியே தகவுடையதென்று கருதுகிறேன். இனி இந்த நகைகளை என்றும் தொடேன்"

"தோழரே, இத்தகைய சபதம் வேண்டாம்; இனிமேல்தான் உம்மிடம் உள்ள பொன்மலர்கள் மணம் உடையனவாகும்".

* * *

கதைஇடையிடையேவிட்டிருப்பதுபோன்றும் முடிவில்லாமலும்இருப்பதாகவும் நீங்கங் நினைக்கிறீர்கள். உங்கள்எண்ணமும் சரியானதுதான்.என்னிடமிருந்த அப்பழைய அச்சுப்பிரதி முன்னும் பின்னும் சிலபக்கங்கள் இல்லாமற்கிடந்ததோடு நடுவிற் சில பக்கங்கள் செல்லரித்தும் ஒழிந்தன. இராமாயணம்போல் பாரகாவியமன்று இது. அப்படியிருப்பினும் "இடைச்செருகல்" செய்வதற்கு வெள்ளித்தம்பிரானைப்போல் ஒருவர் வேண்டும்; நான் அதற்குத் தகுதியுடையவனல்லன். இது ஒரு சிறு கதைதானே என்ற அளவில் அமைதிபெறுவோம்.

முற்றிற்று.

கலாநிலயம் முன்னைய வால்யூம்கள்.

1928, 1930, 1931, 1932, 1933 வருடத்திய வால்யூம்கள் வேண்டுவோர் உடனே பெற்றுக் கொள்வது நலம்.

வால்யூம் ஒவ்வொன்றின் விலை:—பைண்ட் செய்யாதது. ரூ. 7-8-0 ஆப் லெதர் கில்ட் பைண்ட் செய்தது. ரூ 9-0-0. தபால் அல்லது ரயில் கட்டணம் வேறு.

அப்பர்

அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[326-வது பக்கத் தொடர்ச்சி]

(iii) அப்பர் பதிகங்களில் சேகரிக்கக்கூடிய இராமாயண விஷயங்கள்

(a) இராவணன் பலம்.

இராமனது சரிதையின் சிறப்பு இராவணன் சிறப்பால் நிலைநிற்பதாம். இராவணன் செய்த குற்றம்யாது? பிறன் மனைவியை வவ்வியது; இது தவிர வேறு குற்றம் அவன் செய்யவில்லை. தன்புதல்வன் மேகநாதன் இந்திரனைச் சிறையின் வைத்தபிறகு தனது பிதாமகனுகிய பிரம்மன் வேண்டியவாறு விடுவித்தான். இராவணன் கார்த்தவீரியார்ச்சுனனுல் சிறையிடப்பட்டபோதும் பிரம்மன் சென்று அவனை விடுவித்தனன். இந்தத் தசக்கிரீவனுக்கு, இராவணனென்று பட்டம் தந்தது கைலாயநாத னுகும்:—

கைத்தலங்க ளிருபதுடை யரக்கர் கோமான்
கைலைமலை யதுதன்னைக் கருதா தோடி
முத்திலங்கு முடிதுளங்க வளைக ளெற்றி
முடுகுதலுந் திருவிரலொன் றவன்மேல்வைப்பப்
பத்திலங்கு வாயாலும் பாடல் கேட்டுப்
பரிந்தவனுக் கிராவணனென் * றீந்த நாம
தத்துவனைத் தலையாலங் காடன் றன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே.
—திருத்தலையாலங்காடு - திருத்தாண்டகம் - 10.

எனவே இவன் பிரமனுக்கும் பரமனுக்கும் உகந்தவனென்பது வெளிப்படை. திருஞானசம்பந்தர் திருநீற்றுப்பதிகத்தில் "இராவணன் மேலது நீறு" என்பதும் அவன் சிவபக்தனென்பதை வெளியாக்கும். ஆயினும் அவன் வன்கண்ணரக்கன்† உலகத்திற்குத் துன்பந் தருபவன். அழகு பெற்றவனுயினும் சித்தசுத்தி பெற்றவனல்லன்-ஆணவமலமே ஒருருவாகவந்தவன்-ஆயினும் அவன் அழகில் சிறந்தவன் - பராக்கிரமம் நிறைந்தவன்; கல்விகேள்விகளில் மிகுந்தவன். நான்கு வேதமும் கரைகண்டவன். நவவியாக்கிரண பண்டிதன். பலகலைகளில் வல்லவன். அவனுக்கு அன்னத்தேர் * ஊர்தியாக விருந்தது. சமயோசிதமாய் எத்தகையதேவர்களையும் தன்வசஞ் செய்யக்கூடியதிறமை பெற்றவன். கைலாயமலையை எடுக்க இவன் பிரயத்தனஞ் செய்தபோது சிவபெருமான் திருவிரலால் அம்மலையை ஊன்ற இவன் தலைகள்நெரிந்ததும், இதற்குச் செய்யவேண்டிய உபாயம் இன்னதென்றறிந்து தனது தலையொன்றுலும் கையாலும் வீணைசெய்து சிவபெருமான் உவக்கும்படி சாமவேதகானம் பாடினுனென்றும், § அதனுல் முன்னிலும் அதிகவலிவும் வாணுளும் வாளும்பெற்றனனென்பதும், அவைகளைக்கொண்டு, பக்தியீனனுய் ஆணவமலவடிவான இவ்வரக்கன் இந்திரன் முதலாயினேர் நடுங்கும்படியான ஆற்றலை அடைந்தனனென்பதும் பின்வரும் அப்பர்பாசுரங்களால் விளங்கும்:—

மீளாத ஆளென்னை யுடையான் தன்னை
வெளிசெய்த வழிபாடு மேவி னுனை
மாளாமை மறையவனுக் குயிரும் வைத்து
வன்கூற்றின் உயிர்மாள உதைத்தான் றன்னைத்
தோளாண்மை கருதிவரை யெடுத்த தூர்த்தன்
தோள்வலியுந் தாள்வலியுந் தொலைவித் தாங்கே
நாளோடு வாள்கொடுத்த நம்பன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே.
—திருநாரையூர் - திருத்தாண்டகம் 10.

செறிகொண்ட சிந்தைதனுள் தெளிந்து தேறித்
தித்திக்குஞ் சிவபவனத் தமுதம் போலும்
நெறிகொண்ட குழலியுமை பாக மாக
நிறைந்தமரர் கணம்வணங்க நின்றுர் போலும்
மறிகொண்ட கரதலத்தெம் மைந்தர் போலும்
மதிலிலங்கைக் கோன்மலங்க வரைக் கீழிட்டுக்
குறிகொண்ட இன்னிசைகேட் டுகந்தார் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டதெங் கூத்த னுரே.
—திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் - திருத்தாண்டகம்.

குலங்கிளரும் வருதிரைக ளேழும் வைத்தார்
குருமணிசேர் மலைவைத்தார் மலையைக் கையால்
உலங்கிளர எடுத்தவன்றேள் முடியும் நோவ
ஒருவிரலா லுறவைத்தார் இறைவா என்று
புலம்பதலும் அருளோடுபோர் வாளும் வைத்தார்
புகழ்வைத்தார் புரிந்தாளாக் கொள்ள வைத்தார்
நலங்கிளருந் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானுர் நல்ல வாறே.
—திருநல்லூர் - திருத்தாண்டகம் 11.

இராவணன்* தோள்வன்மைமாத்திர முடையவன் அல்லன். அவன் இடம், பொருள், ஏவல் என்னும் மூவகைச் சம்பத்திலும் நிறைந்தவன். அலைகடலும்,

---

* இரக்க மில்துணைத் தோடுல கெங்குநலி வேம்போ
ரரக்கன் முடியத்தலை புயத்தொடு மடங்கத்
துரக்க விரலிற் சிறிது வைத்தவ ரிடஞ்சீர்
வரக்க ருணையா ளர்பயில் வண்டிரு வையாறே.
—சம்பந்தர்.

† இரவண னிருபது கரமெழில் மலைதனில்
இரவண நினைதர வவன்முடி பொடிசெய்து
இரவண மாமர்பெய ரருளின னகநெதி
இரவண நிகர்வலி வலமுறை யிறையே.
—சம்பந்தர் - திருவலிவலம் 8.

* பொன்னொத்த மேனிமேற் பொடியுங் கண்டேன்
புலித்தோ லுடைகண்டேன் புணரத் தன்மேல்
மின்னொத்த நுண்ணிடையாள் பாகங் கண்டேன்
மிளிர்வதொரு பாம்பும் அரைமேற் கண்டேன்
அன்னத்தே நூர்ந்த வரக்கன் றன்னை
அலற வடர்த்திட்ட வடியுங் கண்டேன்
சின்னமலர்க் கொன்றைக் கண்ணி கண்டேன்
சிவனைநான் சிந்தையுட் கண்ட வாறே.
—திருவினுத் திருத்தாண்டகம் - 11.

§ விலங்க லெடுத்துகந்த வெற்றி யானை
விறலழித்து மெய்ந்நரம்பால் கீதங் கேட்டன்
றிலங்கு சுடர்வாள் கொடுத்தார் போலும்
இன்னம்பர்த் தான்றேன்றி யீச னுரே.
—திருவின்னம்பர் - திருத்தாண்டகம் - 10

* மல்லை மல்கிய தோளரக் கன்வலி
ஒல்லை யில்லொழித் தானுறை யும்பதி
நல்ல நல்லமெ னும்பெயர் நாவினுல்
சொல்ல வல்லவர் தூநெறி சேர்வரே.
—திருநல்லம் - திருக்குறுந்தொகை 10

திண் ‡ மதிலும், கருவரை சூழ் கானலும் பெற்றது அவன் ஆட்சிசெய்த இலங்கை. இலங்கை மாநகரம் இராவணனுக்கு முன்னர் அளகை மன்னனான குபேரன் ஆண்ட நகர் என்றால் எல்லா நிதிகளும் நிறைந்ததன்றோ? பின்னர்க் குபேரனிடமிருந்த புட்ப விமானத்தையும் இத் தசக்கிரீவன் பறித்துக்கொண்டான்.

மதத்த வாளரக் கன்மணிப் புட்பகம்
சிதைக்க வேதிரு மாமலைக் கீழ்ப்புக்குப்
பதைத்தங் கார்த்தெடுத் தான்பத்து நீண்முடி
பிதக்க வூன்றிய பேரெயி லாளரே!

—திருப்பேரெயில்-திருக்குறுந்தொகை 12.

என்பர் திருநாவுக்கரசு. அத்தேர் வெகு சூக்குமமான யந்திரத்தால் ஓட்டப்பட்டதென்பர் அவர்:—

பொறித்தே ரரக்கன் பொருப்பெடுப் புற்றவன்
பொன்முடிதோள்
இறத்தா ளொருவிர லூன்றிட் டலற
இரங்கியொள்வாள்
குறித்தே கொடுத்தாய் கொடியேன் செய்குற்றக்
கொடுவினைநோய்
செறுத்தாய்த் திருச்சத்தி முற்றத் துறையுஞ்
சிவக்கொழுந்தே.

—திருச்சத்திமுற்றம்-திருவிருத்தம் 10.

இராவணன் சிறந்த சிவபக்தன். "இராவணன்மேலது நீறு" என்றுகூறுவர் சம்பந்தர். ஆயினும் சாந்தமென நீறணிந்தவனல்லன்; அவர், கோளறு திருப்பதிகத்தில் 8-ம் பாசுரத்தில் "ஏழ்கடல் சூழிலங்கை யரையன்தனோடு மிடரான வந்து நலியா" என்றதால் இராவணனோடும்வருகின்றஇடர் யாதெனில் அவனைவிட்டு நீங்காத ஆணவமன்றோ? இதன் வலிவு இப்பதிகத்தின் முதல் ஏழு பாசுரங்களைச் சற்றுக் கவனித்தால் விளங்கும். வேயுறு தோளி பங்கனென்னும் முதல் பாசுரத்தில் நவக்கிரகங்களுடைய இடரைப் புகலிவேந்தர் குறிப்பிடார். 2-ம் பாசுரத்தில் 27 நக்ஷத்திரங்களின் சேஷ்டையும் காட்டினர். 3-ம் பாசுரத்தில் "திருமகள் கலையதூர்தி செயமாது பூமி திசைதெய்வமான" வற்றின் தன்மையைக்குறிப்பிட்டார். 4-ம் பாசுரத்தில் "கொதியுறு காலனங்கி நமனோடு தூதர் கொடுநோய்களான பலவற்றின் துன்பத்தைக் காட்டி 5-ம் பாசுரத்தில் "வெஞ்சின அவுணரோடும் உருமிடியும்மின்னுமிகையான பூதங்களின்" சேட்டைகளையும், 6-ம்பாசுரத்தில் "கோளரி யுழுவையோடு கொலையானை கேழல் கொடுநாகமோடு கரடி, ஆளலி" இவற்றின் துஷ்டத் தன்மையையும் விளக்கினர். பிறகு ஏழாம் பாசுரத்தில் வெளியிலுள்ள எல்லாத்துன்பங்களையும் வெல்லலாமாயினும், அவற்றினும் மிகக்கொடியவாய் நம்முடன் பிறந்த தேகவினைகளான "வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்த" வினைகளைக் காட்டி முதல் ஏழு பாசுரங்களில் ஏழுவகைத் துன்பக் கடலாய்க் குறித்து அவற்றை நீந்திக்கடத்தலே, அந்தக் காரணங்களின் துன்பங்களான மும்மல நிவர்த்தியால் நிலைக்கும் மேன்மைஎனக் காட்டுதல்போல் 9-வது பாசுரத்தில் "இலங்கையரையன்றனோடு மிட"ரென ஆணவமலத்தின் கொடுமையைக் குறிப்பிட்டார். இதை மற்றொருபதிகத்தில் 8-ம் பாசுரத்தில், "நின்றடர்த்திடு மைம்புலன்நிலையாதவண்ணம்நினைந்துளத்திடைவ" தெனக் குறிப்பால் விளக்குவார். உலகவியல்பில் * செல்வாக்கும் வெற்றியுந் தருவது இவ்வாணமலமே.

ஆகையால் இராவணன் இராச்சியம் நாகரிகத்தில் முதிர்ந்தது - அதை வெல்வதற்குப் பெருஞ்சேனைத் துணை அவசியமாதலால், இராமன் சுக்கிரீவனுடன் நட்புப்பூண்டு சேதுபந்தனம் செய்யநேர்ந்தனன்.

செங்கண்மால் சிலைபிடித்துச் சேனை யோடுஞ்
சேதுபந் தனஞ்செய்து சென்று புக்குப்
பொங்குபோர் பலசெய்து புகலால் வன்ற
போரரக்கன் நெடுமுடிகள் பொடியாய் வீழ
அங்கொருதன் திருவிரலா லிறையே யூன்றி
யடர்த்தவற்கே அருள்புரிந்த அடிக ளிந்நாள்
வங்கமலி கடல்புடைசூழ் மாட வீதி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே.

—திருவலம்புரம் - திருத்தாண்டகம் 10.

எனவே இராவணன் தேகபலமாத்திர மல்லாமல் கலை நாகரிகம் சேனைகள் மாயை பக்தி வரம் இவற்றோடுங்கூட மிகவும் உரம்பெற்றுத் தேவர்களையும் ஏவல் கொள்ளும் சக்தி வாய்ந்தவனென்பது அப்பர் திருக்கடைக் காப்புச் செய்யுட்களில் விளங்கும்.

‡ குன்றி னுச்சி மேல்வி ளங்குங்
கொடிம தில்சூ ழிலங்கை
அன்றி நின்ற வரக்கர் கோனை
யருவ ரைக்கீ ழடர்த்தாய்.
சம்பந்தர் - திருநெடுங்களப் பதிகம்.

* வாய்ந்தபுகழ் விண்ணவரும் மண்ணவரும் அஞ்சப்
பாய்ந்தமர்செ யுந்தொழிலி லங்கைநகர் வேந்தற்
கேய்ந்தபுயம் அத்தனையு மிற்றுவீழ மேனாள்
காய்ந்தவ னிருப்பது கருப்பறிய லூரே.
—திருக்கருப்பறியலூர் - திருவிராகம்.

தமிழ்ப்பாடம் 124.

வில்லிபாரதம்—உத்தியோக பருவம்.

[357-வது பக்கத் தொடர்ச்சி]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

அவன்மொ ழிந்தமொழி தன்செவிப் படலு
மருகிருந் தமுத ருந்துநீ
இவனு டன்சிலர் பகைக்கின் மற்றவர்த
மிசையு மாண்மையு மியம்புவாய்
புவன மொன்றுபட வரினு மென்றனொடு
பொருவ ராயினெதிர் பொரவிடாய்
சிவனு மென்கணையை யஞ்சு மென்றுநனி
சீறினா னிரவி சிறுவனே. 69.

கர்ணன் தனதாற்றலைப் பின்னும் புகழ்ந்துபேசிப் பீஷ்மனுக்குப் பதில் உரைக்கின்றான்.

பதவுரை.

அவன் - பீஷ்மன், மொழிந்த-சொன்ன, மொழி- வார்த்தைகள், தன் - தன்னுடைய, செவி - காதில், படலும் - பட்டதும், இரவி - சூரியனது, சிறுவன் - புத்திரனாகிய கர்ணன்,

" அருகு - பக்கத்தில், இருந்து - பிரியாமல் இருந்து, அமுது - சோற்றை, அருந்தும் - உண்கின்ற, நீ -

நீ, இவனுடன் - இந்தத் துரியோதனனுடன், சிலர் - சிலர், பகைக்கின் - பகைகொண்டால்,(மற்று-அசை) அவர்தம் - அப்பகைவர்களுடைய, இசையும் - புகழையும், ஆண்மையும் - ஆற்றலையும், இயம்புவாய் - எடுத்துப் பேசுவாய்.

புவனம் - இந்தப் பூவுலகத்தில் உள்ளவர்கள் அனைவரும், ஒன்றுபட- ஒன்றாகச்சேர்ந்து, வரினும் - வந்தாலும்,(என்னொருவனோடுபோர்செய்யத் துணியார். அல்லது அவர் ஒருகால்) என்றனொடு - என்னோடு, பொருவர் ஆயின்- போர்செய்யத் துணிந்தாராயினும், எதிர்பொர விடாய் - எதிர்த்துப் போர்செய்வதற்கு என்னை விடமாட்டாய்;

சிவனும் - சிவபிரான் கூட, என் கணையை - என்னுடைய அம்பிற்கு, அஞ்சும் - பயப்படுவான்''

என்று - என்று, நனி - மிகவும், சீறினன் - கோபித்தான்.

விரிவுரை:—வண்மையெனும் தனிப்பெருங்குணத்திற் சிறந்தவனாயினும், பாகன்மகனாகிய தன்னை யோர் அரசனாக்கிய துரியோதனன்பால் நிலைத்திருந்த நன்றியின் மிகுதியாலும் வீராவேசத்தினாலும் உரையின் தகுதியை மறந்து கர்ணன், பீஷ்மனைத் தாழ்த்தியும் தன் மேம்பாட்டை உயர்த்தியும் இவ்வண்ணம்பேசலாயினன். போராற்றல் பெருந்திறத்தில் சிவபிரானிற் சிறந்தோர் இல்லையென்பது கர்ணன் எண்ணம். பின் பதினேழாம்போர்ச் சருக்கத்தில், சல்லியன் தனக்குச் சாரதியாய் வருவனாயின்,“அர்ச்சுனனுக்கு அடலாழி அவனேயன்றிச் சிவன் வந்து தேர்விடினும் கொல்வேனந்தத் தேர்நின்றோரிருவரையும், செங்கோல்வேந்தே'' என்று கர்ணன் துரியோதனனுக்குக் கூறிய உறுதிமொழிகளும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கன. சூரமாயினும் வீரியம் பேசேல் என்றவாக்கில் கர்ணனுக்கு நம்பிக்கை இல்லைபோலும். ஒருவன் தன்னைத்தானே இவ்வண்ணம் புகழ்ந்துகொள்வது தன்மேம்பாட்டுரையணி என அழைக்கப்படும்.

குறிப்பு:—இரவி + சிறுவன் = இரவி சிறுவன், நிலைமொழி உயர்திணையாதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை.

இரவி மைந்தனொடு கங்கை மைந்தனெதிர்
வாய்மை யொன்றையு மிசைத்திலன்
பொரவ றிந்திடுதே மன்றுவெஞ் சமரி
லென்றெ ழுந்துதனி போயினு
னரவ வெங்கொடி யுயர்த்த கோவுமிக
லரச ருக்குவிடை நல்கினன்
விரவுபைந் துளப மாலையான் விதுரன்
மனையி லுற்றது விளம்புவாம். 70.

இதற்கெதிர் யாதும் உரையாமல், “பின் போரில் தெரியும் உன் பேச்செல்லாம்'' என்பதோடு பீஷ்மன் அகன்றனன்.

பதவுரை.

கங்கை மைந்தன்- கங்கையின் மகனான பீஷ்மன், இரவி மைந்தனொடு - சூரியன் மகனான கர்ணனுக்கு, எதிர் வாய்மை- எதிர்வார்த்தை,ஒன்றையும் இசைத்திலன் - ஒன்றும் சொல்லாமல்,“அன்று - பின்னாள், வெம் சமரில் - கொடியயுத்தகளத்தில், பொர - பின் நீ சண்டை செய்யும்போது, அறிந்திடுதும் - உன் பேச்சிற்கேற்ற ஆற்றல் உள்ளதோ இல்லையோ என்பதை அறிவோம் போ'', என்று-என்று சொல்லி,எழுந்து- எழுந்து, தனி போயினன் - தனியாகப்போனான்.

அரவம் - பாம்பாகிய, வெம் - கொடிய, கொடி - பதாகையை, உயர்த்த - தூக்கிய, கோவும் - அரசனாகிய துரியோதனனும், இகல்- ஆற்றல் பொருந்திய, அரசருக்கு - மன்னவர்களுக்கு, விடைநல்கினன் - விடைகொடுத்தனுப்பினான்.

பை - பசுமையான, துளபம் - துளசி, விரவு - சேர்ந்த, மாலையான் - மாலையையுடைய கிருஷ்ணன், விதுரன் - விதுரனது, மனையில் - வீட்டில், உற்றது - சேர்ந்ததை, விளம்புவாம் - இனிச் சொல்வோம்.

கிருஷ்ணன் தூதுச் சருக்கத்தில் பாடத்திற்கு நாம் எடுத்துக்கொண்ட பாகம் இதனோடு முடிகின்றது. இனி, நைடதத்தின் ‘நளன் தூதுப் படலம்’ ஆரம்பமாகும்.

இலக்கணம்.

M. உரிச்சொற்றொடர்.

பெயர் வினைச் சொற்களை விட்டு நீங்காமல் அவைகளின் குணத்தைத் தழுவிநிற்கும் சொற்கள் உரிச்சொற்கள். இவை பெரும்பாலும் செய்யுளிலேயே பயிலப்பெறும். சால உறு நனி கூர் கழி தட தவ மழ குழ கடி மா, முதலியன தமிழிற் பயினும் உரிச்சொற்கள். இவைகளிலொன்று நிலைமொழியாயிருக்கத் தொடர்கின்ற தொடர் உரிச்சொற்றொடராகும். உரிச்சொற்றொடரில் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுவதும் மிகாததும் ஒரு விதிக்கு அடங்கிப் பயில்வதாய்க் காணவில்லை. எவ்வெச் சொற்களுக்குப்பின் மிகுகின்றதென்பதும் எவ்வெச்சொற்களுக்குப்பின் மிகுகின்றதில்லையென்பதும் ஆன்றோர் வழக்கைக் கொண்டே அறிதல் வேண்டும்.

I அகர ஈற்று உரிச்சொற்களுக்குப் பின் வருமொழிமுதல் வல்லினமெய் பெரும்பாலும் மிகும் என்று பொதுவாகக் கொள்ளலாம்.

சால + பல = சாலப் பல.
தட + கை = தடக்கை.
தவ + கொண்டான் = தவக் கொண்டான்.
குழ + கன்று = குழக்கன்று.

குறிப்பு:—மழ என்பது அகரஈற்று உரிச்சொல்லாயினும் அதன்பின் வருமொழி முதல் வல்லினமெய் மிகுவதில்லை.

மழ + களிறு = மழ களிறு.

II மற்றைய ஈற்று உரிச்சொற்களுக்குப் பின் வருமொழிமுதல் வல்லினமெய் பெரும்பாலும் மிகுவதில்லை.

உறு + புனல் = உறுபுனல்.
நனி + சீறினன் = நனி சீறினன்.
கொடுமைகூர் + சகுனி = கொடுமைகூர் சகுனி
கழி + பேருவகை = கழிபேருவகை.
கடி + கா = கடிகா—(நளவெண்பா)
மா + பெரும் = மாபெரும்

குறிப்பு:—கடிக்கமலம் என்றும், அருங்கடிப் பெருங்காப்பு என்றும், கடி என்னும் உரிச்சொல்லிற்குப் பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தும் சில விடங்களில் புணர்ந்திருக்கின்றது.

N. அடுக்குத்தொடர்.

விரைவு வெகுளி வியப்பு இரக்கம் உவகை அச்சம் இகழ்ச்சி முதலிய மனோவிகாரங்களால், வந்த சொல்

லே மீண்டும் அடுத்து வரப்பெற்று நிற்குமாயின் அத்தொடர் அடுக்குத்தொடர் எனப்படும்.

அடுக்குத்தொடரின் இடையில் வல்லினமெய் மிகாது.

பார் + பார் = பார்பார்—(விரைவு)
பாதகா போ + போ = போபோ (வெகுளி)
பெரிது + பெரிது = பெரிதுபெரிது—(வியப்பு)
தலைவா + தலைவா = தலைவாதலைவா—(இரக்கம்)
கரும்பு + கரும்பு = கரும்புகரும்பு—(உவகை)
பாம்பு + பாம்பு = பாம்புபாம்பு—(அச்சம்)
பொய் + பொய் = பொய் பொய்—(இகழ்ச்சி)

குறிப்பு:—இனி, "தயிர்தயிர்," "புளிபுளி," "பாக்குபாக்கு" என விற்பனைப்பொருளை விளம்புவதற்கும் சொற்கள் அடுக்கிவருவதுண்டு. அப்பொழுதும் இடையில் வல்லினமெய் மிகாது.

தமிழில் இரட்டைக்கிளவிகள் என்பன சிலவுள. சலசல, கலகல, மளமள, தடதட, படபட, என்பனபோல் இவை இரண்டுசொற்களாகப்பிரிக்கப்படாமல் ஒருசொல் போலவே நின்று பொருள்படும். கலகல, எனச் சேர்ந்துவருமானுற்றான் அது ஓர் ஒலிக்குறிப்பைத்தந்து பொருள்படக்கூடும். 'கல்' என்று தனியாய் நின்றால் அச்சொல்லிற்கு எவ்விதக்குறிப்பும் எவ்விதப்பொருளும் இல்லை. கல, கள, மள, என்பவைகளை எப்பொருளிலும் எவ்விதத்திலும் பயில இயலாது. இதுதான் இரட்டைக்கிளவிக்கும் அடுக்குத்தொடரிற்கும் உள்ள வேறுபாடு. பாம்பு பாம்பு என்பது போன்ற அடுக்குத்தொடரிலும், மளமள என்பது போன்ற இரட்டைக்கிளவியிலும் ஒரே சொல் இருமுறை வருகின்றதாயினும், அடுக்குத்தொடர் ஆகின்ற சொல் தனியாய் நிற்கும்போதும் பொருள்தரவல்லது; மற்று, இரட்டைக்கிளவியாகின்ற சொல்லோ ஒருபோதும் தனியாய் நிற்காது; நின்றாலும் பொருளில்லை. பாம்பு, பார், பெரிது, தலைவா, கரும்பு, என முன்காட்டிய உதாரணங்களில் அடுக்குத்தொடராய் வந்திருக்கின்ற சொற்களுக்குப் பொருள் இருப்பதும், கல சல மள தட பட என்பவைகள் இரட்டைக்கிளவியாய் வராவிடில் பொருள் இல்லாமையும் எளிதில் உணரலாம். ஆகையால், மலைமலை, ஓடி ஓடி, வருகவருக, நில்நில், என எந்தச்சொல்வேண்டுமெனினும், விரைவு அச்சம் வியப்பு முதலிய பொருள்கள் தரும்படி அடுக்கிவரல் கூடும். இரட்டைக் கிளவியோ அவ்வாறு வர இயலாது. தமிழ் வழக்கில் மளமள, களகள, பளபள, சலசல, கிடுகிடு என்பனபோல் சில சொற்கள்தாம் இரட்டைக்கிளவியாய்ப் பயின்றுவருகின்றன.

இரட்டைக்கிளவிகள் பெரும்பாலும் ஒலிவகைகளைக் குறிக்க வரும்:—

சலசல வென்று ஆற்றுநீ ரோடியது.
சளசள வென மழை பெய்தது.
மளமள வென மூங்கில் முறிந்தது.
களகள வெனச் சிரித்தான்.
கலகல வெனப் பேசினான்.
மடமட, தடதட வென்று வீடு இடிந்தது.
நறநற வெனக் பல்லைக் கடித்தான்.

சில இரட்டைக் கிளவிகள் ஒளி, விரைவு, முதலியவற்றின் மிகுதியைக் காட்டுதற்கும் வரக்கூடும்:—

பளபள வென இருந்தது.
குடுகுடு வென ஓடினான்.

நசநச வெனப் பேசினான், மசமச வென்று இருந்தான், கசகச வென்றிருக்கின்றது என வெறுப்பைக் குறிக்கும் இரட்டைக் கிளவிகளும் உள. "களகள வெனக் கண்ணீர் சொரிந்தது" என, விரைவொடு மிகுதியையுங் காட்டக்கூடும்.

இரட்டைக்கிளவிக்கு இடையில் வல்லின மெய் மிகாது.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—6. கலன்காண் படலம்

[344-வது பக்கத் தொடர்ச்சி]

பாத மன்றிப் பார்த்தில னிளவல்.

கொடுவலி யரக்கன் சீதாபிராட்டியை மண்ணொடு பெயர்த்து விண்ணின் நெடுவழிபடருங்கால் காகுத்தன் கற்பினளாகிய அந்நங்கை உதிர்த்த அணிகலன்களைச் சுக்கிரீவன் இராமபிரானுக்குக்காட்டிய இச்செய்தி முதனூலிலிருந்து இந்நூலில் சற்றே முன்பின்னாக மாறி நிகழ்கின்றது. எனினும், இவ்வணிகலன்களைக் காண இராகவனுக்குத் துயரம் கைம்மிகுவதல்லால் விளையும் பயன் வேறொன்றும் இல்லாமை உணர்ந்திருக்கவேண்டிய சுக்கிரீவன் இதனைக் காட்டியதன் கருத்துயாதோவென ஈரிடத்தும்ஐயுறுதல் இயற்கையே. வான்மீகத்தின்படி, அனுமன் அழைக்க இராகவன் உடன்வந்துசுக்கிரீவனைச்சந்தித்தான்—சந்தித்தவளவில்இராமன் அவனுடன்சுகதுக்கங்களில் ஒத்தநண்பனாயினன்—சுக்கிரீவன்தன்எளிமையைக்கூறினன்—உடனே இராமன் "வாலியைக் கொல்வேன்' என்று வாக்களித்தான்—இந்நிலையில் சீதையின் அணிகலன்கள் இராமனுக்குக் காட்டப்பட்டன. அவைகளைக் கண்டதும் "என் அன்பே" என்று துயரத்தால் கதறிக்கொண்டு இராமன் தரையில் விழுந்தானானும், அத்துயரம் விரைவில் கொடியதோர் சீற்றமாக மூண்டு "அந்த இராவணன்பொருட்டு அரக்க ரனைவரையும் நான் நாசஞ்செய்துவிடுகின்றேன்; மைதிலியைக் கவர்ந்து எனக்குக் கோபம் மூட்டின அவ்வரக்கன் தான் சாகவென்றே இயமபுரியின் கதவைத் திறந்து வைத்திருக்கின்றான்" என்னப்பகரும் வஞ்சினமாகவிளைந்தது. இவ்வகை நிலையை இராமனது மனம் அடைய வேண்டுமென்பது சுக்கிரீவனுடைய கருத்துநிறைவேறுதற்கு மிகவும் அவசியம். இதன்மேல்தான் அவன் தானும் தனது மனைவியை இழந்திருந்த நிலையைச் செப்பி இராமனைத் தேற்றுவான்போல் அவன் பரிவையும் அதனுடன் அவனது உதவியின் உறுதியையும் பெற்றுக்கொள்கின்றான். கொடியோனவ் வரக்கன் தன்னைக் கவர்ந்துகொண்டு சென்றபோது சீதாபிராட்டி எறிந்த ஆபரணங்களைச் சுக்கிரீவன் இன்று இராமனுக்குக் காட்டியதால் நேர்ந்த நலம் இதுதானென்று இருக்குமளவில் வான்மீகிமுனிவர், இளையவள்ளலின் அளவிலாப் பெருந்தகைமையை உவகை

யுடன் விளம்புதற்கு இச்செவ்வியைப் பயன்செய்து கொள்வாராகின்றார். அவ்வணிகலன்களை ஆகமுறத் தழுவிப் புலம்பலுற்ற இராகவன் இலக்குவனை நோக்கி, "லக்ஷ்மணா, அரக்கர் தன்னை யபகரித்துச் செல்லும்போது சீதை தன் சரீரத்திலிருந்து கழற்றியெறிந்த உத்தரீயத்தையும் ஆபரணங்களையும் பார்; இவற்றை இவள் இந்தப் புற்கள்நிறைந்த பூமியில் எறிந்ததனாற்றான் இவை முன்னிருந்தபடியே இருக்கின்றன" என்னலும், இதுபற்றித் தானொன்றுங் கருத்துக்கொள்ள இயலாமையை, "ஐயனே, தினமும் நான் அவருடைய பாதங்களையே சேவித்தவனாகையால் அவர் பாதங்களில் அணிந்திருந்த நூபுரங்களை அறிவேனேயன்றி அவர் கையிலும் காலிலும் அணிந்திருந்த கேயூரங்களையுங் குண்டலங்களையும் அறியேன்" என்னத் தெரிவித்தான் இலக்குவன். இன்னதோர் பெருமைக் கிலக்குவனை இலக்காக்கும்பொருட்டே வான்மீகமுனிவர் இவ்வணிகலன்களை இன்று களத்தினுள் கொணர்ந்திருப்பினும் இருக்கலாம். தன் கொழுந்தியின் பாதத்திருந்த நூபுரங்களன்றி வேறொரு இழையினை நோக்கியுமறியா இப்பெருமகனையோ முன்னர் அம்மாதராள்,

"இராமருக்குச் சகோதரஉருவமாகிய சத்துருப்போன்றவரே, என்நிமித்தம் நீர், இராமர் காட்டில் மாண்டு போகட்டும் என்றிருக்கின்றீரோ. என்மேல் வைத்த ஆசையினால்தான் நீர் இராகவரைத்தேடிச் செல்லவில்லை.....கெட்டவரே, கருணையற்றவரே, கொடியவரே, குடிகேடரே......குரூர எண்ணமும் கெட்ட எண்ணமும் உடையசத்துருவாகிய உம்மிடத்தில் இவ்விதமான கொடிய செய்கை காணப்படுவது ஆச்சரியமன்று"

என்று மாயமான் குரலிற்கு மயங்கி, அவன் ஏகாத காரணத்தால் ஏசலுற்றாள். அவள் அங்குச் செய்த அக்கொடுமையின் வன்மையை வான்மீகிமுனிவர் இங்குஇவ்விலக்குவன் சொற்களால் விளக்குகின்றார். அதுவுமன்றி, அவ்வாறு தகவின்றி ஏசிய சீதையை வெகுண்டு இவன்,

ஓ, மைதிலி, நீர் இவ்வாறு அநுசிதமாகப் பேசினது ஆச்சரியமன்று. இது இவ்வுலகத்திலுள்ள மாதர்களியல்பு.இயற்கையாகவே பெண்களின் தன்மை கெட்டது. சீ! நீர், கெட்டீர்"

என வெறுத்தபோதும் அவள் முகத்தைப் பாராமல் பாதங்களையே நோக்கியவண்ணம் பேசியிருத்தல்வேண்டுமென ஒருவாறு ஊகிக்கலாம்.

வான்மீகமுனிவர் சீதையின் அணிகலன்களை வரவழைத்தகாலமும் கருமமும் எதுவாயினும், வந்தஅந்தக் கலன்களைத் தானும் தன் இராமனுக்குக் காட்டாமலிருக்கக் கம்பருக்கு மனம் வரவில்லை. ஆயினும் இக்காட்சி தம் நாடகம் வளர்வதற்கும் உதவியாயிருத்தல் வேண்டும். எனின், எத்தூரம் இதனைச் சாதிக்கின்றாரென்பதைச் சிறிது இனிப் பார்க்கலாம்.

பாலொடு நெய் கலந்தன்னதோர் நட்பினை இராமபிரானொடுபூண்ட சுக்கிரீவன், "முன்னொருநாள் நாங்கள் இக்கு இருந்தபோது, ஆகாயத்தில் இராவணனால் எடுத்துச் செல்லப்பெற்ற ஒரு மாதராள், நின் தேவியே போலும் அவள், துன்பமுடன் கதறித் தன் கண்ணீருடன் சில ஆபரணங்களையும் இங்குச் சொரிந்தனள்; அவள் கருத்து யாதென ஓர்ந்திலம். அவைகளைக் கொணர்ந்து காட்டுகின்றேன், நீயே உணர்ந்து கொள்" எனக் கூறி, அவைகளைக் கொணர்ந்து வைத்தலும் இராமன்,

தெரிவுற நோக்கினன் றெரிவை மெய்யணி
யெரிகன லெய்திய மெழுகின் யாக்கைபோ
யுருகின னென்கில முயிருக் கூற்றமாய்ப்
பருகின னென்கிலம் பகர்வ தென்கொலாம்.

[சீதாதேவி தன் மெய்யில் அணிந்துகொள்கின்ற ஆபரணங்களை நன்றாகப் பார்த்தான். அப்பொழுது அவன்எரிகின்ற நெருப்பினிடைப்பட்ட மெழுகுபோலத்தன் உடல் நெகிழ்ந்தானென்று சொல்லவும் எம்மால் இயலவில்லை; அல்லது, தன் உயிருக்கு வலிமை செய்கின்ற அமிர்தம் என்ன அவ் வணிகலன்களின் காட்சியைத் தன் கண்களால் பருகினானென்னலாமோவெனின் அவ்வாறுசொல்லவும் எம்மால் இயலவில்லை. எனின் இராமனது நிலையை என்னவென்று உரைப்பது]

எனத் துவக்கிய கம்பர், அவ்வணிகலன்களைக் கண்டவளவில் அவைகளை அணிந்திருந்த நல்லாள் தன் முன் நினைவு தூண்ட அதனால் இராமன் இனைந்துருகிய தன்மையை,

நல்குவ தென்னினி நங்கை கொங்கையைப்
புல்கிய பூணுமக் கொங்கை போன்றன
அல்குலி னணிகளு மல்கு லாயின
பல்கலன் பிறவுமப் படிவ மானவே

[அவ்வாபரணங்கள் இராமனுக்கு வேறு யாது செய்ய வல்லன—சீதையின் முலைகளைச் சார்ந்திருந்த ஆரம் முதலியஆபரணங்கள் இராமனுக்கு, அவைகளை அணிந்திருந்த முலைகளாகவே தோன்றின. அவ்வாறே அவள் அல்குலில் அணிந்திருந்த மேகலை முதலிய ஆபரணங்கள் அவ்வல்குலாகவே தோன்றின.]

எனக் கூறிப் பின்னரும், அன்னவை இராமனுக்கு எவ்வகை இழைத்தன என்பதைத் தேர்ந்து இயம்ப மாட்டாதவராய்,

விட்டபே ருணர்வினை விளித்த வென்கெனோ
அட்டன வுயிரையவ் வணிக ளென்கெனோ
கொட்டின சாந்தெனக் குளிர்ந்த வென்கெனோ
சுட்டன வென்கெனோ யாது சொல்லுகேன்

[அந்த ஆபரணங்கள், இராமனது நீங்கியிருந்த உணர்வை மீண்டும் அழைத்துத் தந்தனவென்பேனோ, அல்லது எஞ்சியிருந்த அவன் உயிரையும் கொன்றுவிட்டன என்பேனோ, சாந்தைக் கொட்டியதுபோல் அவனுக்குக் குளிர்ச்சி யளித்தன என்பேனோ, அல்லது, சுட்டனவென்பேனோ! என்னவென்று சொல்லுவேன்]

என ஐயுற்று,

மோந்திட நறுமல ரான மொய்ம்பினி
லேந்திட வுத்தரி யத்தை யேய்ந்தன
சாந்தமு மாயொளி தழுவப் போர்த்தலாற்
பூந்துகி லாயவப் பூவை பூண்களே

[பூவைபோன்ற சீதையின் ஆபரணங்கள்,இராமபிரான் மோந்துபார்த்தற்கு ஏற்றவாசனையுடைய மலர்கள்போல் ஆயின;அவன் தோள்களில் தரிப்பதற்கு ஏற்ற உத்தரீயம் போன்றன; அவன்மீது ஒளிபரவுவதால் அவன் பூசுகின்ற சந்தனம் ஆயின; அவன் அவ்வணிகலன்களைத் தன்சரீரத்தில் சார்த்திக்கொள்வதால், அவை பூந்துகிலும் ஆயின]

ஈர்த்தன செங்கணீர் வெள்ளம் யாவையும்
போர்த்தன மயிர்ப்புறம் புளகம் பொங்குதோள்
வேர்த்தன வென்கெனோ வெதும்பின னென்கோ
தீர்த்தனை யவ்வழி யாது செப்புகேன்.

[பின்னும் அவ்வாபரணங்கள், இராமனது சிவந்த கண்களிலுள்ள நீரின்வெள்ளம் முழுவதையும் வெளியில் இழுத்துவிட்டன. அவன் மேனி முழுவதையும் புளகம்போர்த்தது. அவன் தோள்கள் வேர்த்தன என்று சொல்லுவேனோ,அல்லது வெதும்பினவென்று சொல்லுவேனோ, அப்

பொழுது பரிசுத்தமூர்த்தியாகிய இராமன் அடைந்த நிலை யை என்னவென்று சொல்லுவேன்]

எனமுடிக்கின்றார். இத்துணைத்துயரமும்பட்டது மா நுடஇராமன் என்பதுமட்டுமல்லாமல் இன்பதுன்ப ங்கள் இறந்தவொரு பரம்பொருளே என்பதை இங் குத் 'தீர்த்தன்' என்ற சொல்லால் நினைவூட்டல் நேரி தே. பின்னர் இந்நிகழ்ச்சியை, அசோகவனத்திருந்த சீதையின்பால் சென்று சொன்னபோது அநுமன், "ஏந்திழையாங்கள்காட்டக்கண்டான்உயர்வேதமும் காண்கிலாதான்" எனத் தெரிவிப்பதும் இங்கு நினைத் தற்குரியது. பிரிந்தவர் அணிந்த இழையினைக் கண்ட வர்தன்மை தன்னால் இயம்புத லரிதெனத் தளர்வதே கம்பர்தம் இயற்கைபோலும். இராமனது கணையா ழியை அநுமன் சீதையின் கைகளில் தந்தபோதும்—

இறந்தனர் பிறந்தபய னெய்தினர்கொ லென்கோ
மறந்தன ரறிந்துணர்வு வந்தனர்கொ லென்கோ
துறந்தவுயிர்வந்திடைதொடர்ந்ததுகொலென்கோ
திறந்தெரிவ தென்னைகொலிந் நன்னுதலி செய்கை

எனவே, உரைக்கும்வகை ஒராமையைத் தெரிவித்துக் கம்பர் அயர்வதைக் காணலாம்.

இராமனே யாதும் இயம்பமாட்டாமல் மூர்ச்சை போயினன். "ஐயோ, இவனது உயிரை வாங்கவோ இவ்வணிகலன்களை இங்கு வருவித்தேன்" என்று சுக்கிரீவன், செறிமயிர் சுறுக்கென்று ஏற, அவனைத் தன் தோள்களில் சார்த்திக்கொண்டு தக்கன சொல் லித் தேற்றுவானாயினன்—

அயனுடை யண்டத்தி னப்பு றத்தையு
மயர்வற நாடியென் வலியுங் காட்டியுன்
னுயர்புகழ்த் தேவியை யுதவற் பாலனற்
றுயருழந் தயர்தியோ சுருதி நூல்வலாய்

[வேதநூல்களில் வல்லவனே, பிரம்மதேவன் படைத்த அண்டங்களுக்கு அப்பாலும் சந்தேகமின்றித் தேடி, என் வலிமையையுந் தெரியச்செய்து, உன்உயர்ந்த புகழுடைய தேவியைத் தரக்கூடியவன் நான். ஆதலால், நீ துன்பம் மிகுந்து மூர்ச்சிக்கலாமோ]

திருமக ளனையவத் தெய்வக் கற்பினாள்
வெருவரச் செய்துள வெய்ய வன்புய
மிருபது மீரைந்து தலையு மேவினுன்
னொருகணைக் காற்றுமோ வுலக மேழுமே

[இலக்குமிபோன்ற தெய்வத்தன்மை வாய்ந்த கற்பு டைய அச்சீதை அஞ்சும்படி செய்த கொடியவன் கைகள் இருபதும் தலைபத்தும், நீ அம்பு எய்தால், உன் ஒரு அம் பிற்குப் போதுமோ—ஏழு உலகங்களுந்தான்போதுமோ]

ஈண்டுநீ யிருந்தரு ளேழொ டேழெனப்
பூண்டபே ருலகங்கள் வலியிற் புக்கிடைத்
தேண்டியவ் வரக்கனைத் திருகித் தேவியைக்
காண்டியா னிவ்வழிக் கொணருங் கைப்பணி

[நீ இங்கேயே இரு. பதினன்கு என்று தொகைகொ ண்டு நிற்கின்ற உலகங்களிலெல்லாம் நான் வலிமையோடு சென்று, அவ்விடங்களில் சீதையைத் தேடி, அந்த அரக் கனை முரித்து, உன் மனைவியை இங்குக்கொணர்ந்து சே ர்க்கும் என் கைவேலை ஊழியத்தைப் பார்]

ஏவல்செய் துணைவரேம் யாங்க ளீங்கிவன்
தாவரும் பெருவலித் தம்பி நம்பிநின்
சேவக மிதுவெனிற் சிறுக நோக்கலென்
மூவகை யுலகுநின் மொழியின் முந்துமோ

[நீ ஏவியவற்றைச் செய்யும் துணைவர்களோ நாங்கள்; இந்த இலக்குவனோ குறையாத பெருவலியுடைய உன் தம்பி; பெருமானே, உன் வீரமோ இத்தகையது; ஆத லால், இக்காரியத்தைச் செய்யமாட்டாச் சிறுமையுடை யேன் என்று என்னைக் கருதமாட்டேன்; மூன்று வகை உலகங்களும் உன் சொல்லைக் கடக்குமோ]

பெருமையோ ராயினும் பெருமை பேசலர்
கருமமே யல்லது பிறிதென் கண்டது
தருமமே யல்லது தனித்து வேறுண்டோ
வருமையே துனக்குநின் றவலங் கூர்தியோ.

[பெருமை யுடையவர்களாயினும் உத்தமர் தம் பெரு மையைப்பேசமாட்டார். அவர் செய்து முடிக்கும் காரியங் களையே உலகம் காணும். தருமம் என்பது நீயே அல்லது வேறு உண்டோ. நீசெய்வதற்கு அரியது எது உளது. அவ் வாறாக, நீ கையற்று நின்று வருந்துவாயோ]

முளரிமேல் வைகுவான் முருகற் றந்தவத்
தளிரியல் பாகத்தான் றடக்கை யாழியான்
அளவியொன் றுவரே யன்றி யையமில்
கிளவியாய் தனித்தனி கிடைப்ப ரோதுணை

[சந்தேகமில்லாமல் சொற்களைப் பேசுகின்றவனே, தா மரையில் வசிக்கின்ற பிரமனும், முருகக்கடவுளைப் பெற்ற அந்தத் தளிர்போன்ற தன்மையுடைய உமாதேவியைத் தன்பாகத்தில்உடைய சிவபிரானும், பெரிய தன் கையில் சக்கிராயுதத்தை ஏந்திய திருமாலும், ஒன்றாகச் சேர்ந்து உனக்கு ஒப்பாவரோயல்லாமல்தனித்தனி உனக்குச் சமா னம் ஆவாரோ]

இன்னவாறு இராமனது பேராற்றலையும் தன்னு டைக் கைப்பணியையும் கூறித் தேற்றுவா னமைந்த சுக்கிரீவன்,

என்னுடைச் சிறுகுறை முடித்த லீண்டொரீஇப்
பின்னுடைத் தாயினு மாக பேதுறு
மின்னிடைச் சனகியை மீட்டு மீடுமால்
பொன்னுடைச்சிலையினாய்விரைந்துபோயென்றான்

[பொலிவுடைய வில்லை ஏந்தியவனே, என்சிறிய குறை யை நிறைவேற்றுதலை இப்பொழுதுவிட்டுப் பின்னே அது ஆயினும் ஆகட்டும். விரைந்துசென்று, மின்னல்போன்ற இடைப்பையுடைய சீதையை முதலில் மீட்டுக்கொண்டுவரு வோம்—என்று கூறினான்]

பெருந்தகை வானரச்செம்மல், தன் சிறுகுறை பின்னாக முன்னரே சீதையைத் தேடுதற் குரைத்தது செவ்விதே. ஆயினும், தனக்கது தகவன்றென்றுஇரா மனும், கருமமே நோக்கின் முன்னர் முடிக்கநிற்பது இக்குறையே என்று அநுமனுமினி வற்புறுத்துவாரா கின்றனர். எனினும், தன்குறை முடிப்பது பின்னர் என்று சுக்கிரீவன் இயம்பியதிலடங்கிய பெருந்தகை மையே இராமனது உணர்வினை மீண்டுங் கொணர்ந்த தென்ன அவன் மூர்ச்சை தெளிந்து கண்விழித்துச் சில உரைப்பதாயினன்—

விலங்கெழிற் றோளினாய் வினையி னேனுமிவ்
விலங்குவிற் காத்தின னிருக்க வேயவள்
கலன்கழித் தனளிது கற்பு மேவிய
பொலன்குழைத் தெரிவையர் புரிந்துளோர்கள்யார்

[மலைபோன்ற அழகியதோள்களையுடைய சுக்கிரீவனே தீவினையுடைய நான் விளங்குகின்ற இவ்வில்லை யேந்திய கையினனாய்உயிருடன் இருக்கும்போதேஅவள்தன்ஆபர ணங்களைக் கழித்துவிட்டனள். பதிவிரதா தருமம்பொரு ந்திய பொற்குழையணிந்த மாதர்களில் இப்படிச் செய்த வர் யாரேனும் உண்டோ]

என, அவள்செய்தது தக்கதென்று வியக்கின்றானோ அல்லது தகாதென்று மறுக்கின்றானோ எனத் தெளி தற் கருமையாம் வண்ணம் இராமன் இங்கு இயம்பு

வது, சிறிதுமுன், "ஐயமில் கிளவியாய்" என்று சுக்கிரீவன் அவனைப் பாராட்டியதற்குப் பெரும்பாலும்மாருகஇருக்கின்றது. எனினும், அவள் செய்கை எத்தகையதாயினும் தன்நிலை மிகத் தாழ்ந்ததே என உளேந்து,

வாணெடுங் கண்ணியென் வரவு நோக்கயான்
தாணெடுங் கிரியொடுந் தடங்க டம்மொடும்
பூணொடும் புலம்பியிப் பொழுது போக்கினேன்
நாணொடுஞ் சிலைசுமந் துழல நாணலேன்

[வாள்போன்ற பெரிய கண்களையுடைய சீதை, நான் வந்து தன்னை மீட்பதை எதிர்பார்த்திருக்கவும், நானோ, அடிவாரங்களையுடைய உயர்ந்த மலைகளோடும், தடாகங்களுடனும், ஆபரணங்களோடும் புலம்பி வீண்பொழுது போக்கினேன். இப்படி நான், நாணியோடுகூடிய பெரிய ஒருவில்லைச்சுமந்துகொண்டுதிரிவதற்கு வெட்கப்படாமல் இருக்கிறேன்]

ஆறுடன் செல்பவ ரஞ்சொன் மாதரை
வேறுளர் துயர்செயின் விலக்கி வெஞ்சமத்
தூறுறத் தம்முயி ருகுப்பர் யானெனைத்
தேறின டன்றுயர் தீர்க்க கிற்றிலேன்

[வழியில் செல்கின்ற அழகிய சொற்களைப் பேசுகின்ற மாதரை வேறு எவரேனுந் துன்பப்படுத்தினல், அதனைத் தடுத்துச் செய்யும் கொடிய போரில் அவர்களால் தமக்குத் தீங்குநேர்ந்து உயிரை இழக்கவும்இழப்பார் பிறர்; நானோ, என்னையே நம்பிய சீதையின் துன்பத்தை நீக்க மாட்டாதவனாக இருக்கிறேன்]

கருங்கட லுரெட்டனர் கங்கை தந்தனர்
பொருப்புலி மானொடு புனலு மூட்டினர்
பெருந்தகை யென்குலத் தரசர் பின்னொரு
திருந்திழை துயரநான் றீர்க்க கோற்றிலேன்

[பெருமையுடைய என் குலத்தில் முன்பு தோன்றிய அரசர், கரிய கடலைத் தோண்டினர், கங்கையைப் பூமிக்குக் கொணர்ந்தனர், போர் செய்யும் புலியையும் மானையும் ஒரு துறையில் நீருண்ணும்படி வைத்தனர், அன்னவர்களுக்குப் பின்வந்த நானோ, திருந்திய ஆபரணங்களையணிந்த ஒரு மனைவியின் துயரத்தைத் தீர்ப்பதற்குரிய பாக்கியம் செய்யாதவனாயிருக்கின்றேன்]

இந்திரற் குரியதோ ரிடுக்கண் டீர்த்திக
லந்தகற் கரியபோ ரவுணற் றேய்த்தன
னெந்தைமற் றவனின்வந் துதித்த யானுளேன்
வெந்துயர்க் கொடும்பழி வில்லிற் றூங்கினேன்

[என் தந்தை இந்திரனுக்கு நேர்ந்த பெரும் கஷ்டத்தைத் தீர்த்து, யமனாலும் எதிர்ப்பதற்கு இயலாத போர் வலியுடைய சம்பராசுரனை அழித்தான். அன்னவனிடத்தில் வந்து பிறந்த நானோ வெவ்விய துன்பத்தைத் தருகின்ற கொடிய பழியை வில்லுடனே சுமந்தவனாயிருக்கின்றேன்]

விரும்பெழி லெந்தையார் மெய்ம்மை வீயுமேல்
வரும்பழி யென்றலான் மகுடஞ் சூடலேன்
கரும்பழி சொல்லியைப் பகைஞன் கைக்கொளப்
பெரும்பழி சூடினேன் பிழைத்த தென்னரோ.

[விரும்பத்தக்க அழகுடைய என் தந்தையின் சத்தியம் தவறுமானல் எனக்குப் பழிஉண்டாகும் என்று எண்ணியே முடி சூட்டிக்கொள்ளாத நான், கரும்பினும் இனிய சொற்களையுடைய என் மனைவியைப் பகைவன் கைக்கொண்டுபோக அதனால் மிக்கபழியை மேற்கொண்டேன். எனின், பழிக்காளாகாமல் நான் தப்பியது எங்ஙனம்] எனப் புலம்பிப் புலம்பி இராமன் மீண்டும் மூர்ச்சிப்பானாயினன்.

ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

IV. ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஸ்தோத்திரங்கள்.

[366-வது பக்கத் தொடர்ச்சி]

4. இராகம்—புந்நாகவராளி.] [தாளம்—திஸ்ரத்ரிபுட.

பல்லவி

க்ருஷ்ண மாகேமி தோவபல்கு—கீர்த்தி கல்கு தேவதேவ பால................(க்ருஷ்ண)

சரணங்கள்

1. ஸர்வமு நீவனு கொன்னமாகு—ஸாமர்த்யமு ஜூபுசின்னி..................(க்ருஷ்ண)
2. பாயலே கிமம்மு நீவு ஏயு—பாயமைந தேல்பி ப்ரோவு ஸ்ரீ......... ....(க்ருஷ்ண)
3. மாதோ ஜேரக யிந்த பாதகல்கே—மரதுமாயிக ப்ராணநாத ஸ்ரீ..............(க்ருஷ்ண)
4. இந்துகநுசு தல்லி த்ஸாகெரோலேக—யேபாவுல கண்ட்லு தாகெரோ ஸ்ரீ......(க்ருஷ்ண)
5. ராகேந்து முக தயராதா த்யாக—ராஜார்ச்சித ப்ரோவராதா ஸ்ரீ...............(க்ருஷ்ண)

பொருள்

க்ருஷ்ண - ஹே க்ருஷ்ண பரமாத்மா! மாகு - எங்களுக்கு, ஏமி தோவ பல்கு - என்னவழி சொல்லுகிறாய்? தேவ தேவ - தேவாதி தேவனே! பாலக்ருஷ்ண - பாலகிருஷ்ணனே: கீர்த்திகல்கு - உனக்குக் கீர்த்தி யுண்டாகும்.

ஸர்வமுநீவு அநுகொந்த - எல்லாம் நீயே என்று எண்ணிக் கொண்டிருக்கும், மாகு - எங்களுக்கு, ஸாமர்த்யமு ஜூபு - ஒரு சாமர்த்தியமான வழியைக் காட்டு; சின்னி (க்ருஷ்ண) - ஹே சின்னி (கிருஷ்ண!)

பாயலேகி மம்மு - நிர்க்கதியாயிருக்கும் எங்களை, நீவு-நீ, ஏயுபாயமைந தேல்பி - எந்த உபாயமாவது தெரிவித்து, ப்ரோவு - காப்பாற்றுவாயாக; ஸ்ரீ (க்ருஷ்ண) - ஸ்ரீ (கிருஷ்ண!)

ப்ராணநாத - பிராணநாதா! மாதோ ஜேரக - எங்களுடன் சேராததனால், இந்த பாதகல்கே - இவ்வளவு கஷ்டம் உண்டாயிற்று; இக மரதுமா - இனி உன்னை நாங்கள் மறக்கக் கூடுமோ? ஸ்ரீ (க்ருஷ்ண) - ஸ்ரீ (கிருஷ்ண!)

இந்துகநுசு-இதற்காகத்தானே, தல்லி த்ஸாகெரோ- எங்கள் தாய்மார்கள் எங்களைக் காப்பாற்றி வளர்த்தனரோ? லேக - அல்லது, ஏபாவுல கண்ட்லு தாகெரோ - எந்தப் பாவியின் கண்பட்டதோ? ஸ்ரீ (க்ருஷ்ண) - ஸ்ரீ (கிருஷ்ண!)

ராகேந்து முக - பூர்ணசந்திரனை யொத்த முகமுடையவனே! த்யாகராஜார்ச்சித - தியாகராஜனால் பூஜிக்கப்பட்டவனே! தயராதா - எங்கள் மீது தயையுண்டாக வில்லையா? ப்ரோவ ராதா-காப்பாற்ற வரக்கூடாதா?

குறிப்பு:—இக்கீர்த்தனம் நௌகாசரித்திரத்தில் உள்ளது. கோபிமார்கள் ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்து முறையிட்டுக்கொள்வதாக இது அமைந்துள்ளது.

புந்நாகவராளி ராக லக்ஷணம்

முந்திய இதழில் 'ஹரிஹரி' என்ற கீர்த்தனத்தின் குறிப்பில் புந்நாகவராளி ராகலக்ஷணத்தைக் காண்க.

ஸ்வர ஸாஹித்யம்

ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.

; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.

| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.

|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.

* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம — பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.

ஸரிகம — மேற்படி ஸம்ஜ்ஞையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.

பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

ஸ்ரீக்ம்—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

குறிப்பு:—இக்கீர்த்தனம் மத்யம காலத்திற் பாடப்படவேண்டும்.—

பல்லவி

; * பா . ;	பா ;	பா ; ‖	பா;மா	தாபா	தா ; ‖	;-தா நீ	தா ;	பா; ‖	பா;மா	தாபா	தா ; ‖
; * க்ருஷ்	ணு ;	. ; ‖	மா; .	கே .	மி ; ‖	;-தோ .	. ;	வ ; ‖	ப ; .	ல்கு .	. ; ‖
; * பா . ;	பா ;	பா ; ‖	பா;மா	கா ரீ	ஸா ; ‖	; ஸாரீ	கா ;	மா; ‖	பாமா	காரீ	ஸாஸா ‖
; * கீர் ;	த்தி;	கல் ; ‖	கு ; .	தே .	வ ; ‖	; தே .	. ;	வ ; ‖	பா ; ;	. ல	. . ‖

சரணங்களை யெல்லாம் பல்லவியைப் போலவே பாடவேண்டும்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

6-ம் பத்து. 7-ம் தசகம்.

[363-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பாசுரம்

இன்றெனக்குதவாதகன்றவிளமானினிப்போய்த்
தென்றிசைத்திலதமனைய திருக்கோளூர்க்கே
சென்றுதன் திருமாலிருக்கண்ணுஞ்செவ்வாயுங்கண்டு
நின்றுநின்றுநையுநெடுங்கண்கள் பனிமல்கவே.

உரை:—இன்றைக்கு எனக்குத் துணையாய் நின்று உதவாமல் என்னைவிட்டகன்றுபோன என் பெண் தென் திக்குக்கே ஒரு திலகம்போன்ற திருக்கோளூர் க்ஷேத்திரத்திற்குச் சென்று மஹா இலக்குமியுடன் கூடிய கலவையால் புதுக்கணித்த அவனது தாமரஸம் போன்ற திருக்கண்களையும் சிவந்த அதரமான திருப்பவளத்தையும் பார்த்துத் தனக்கு எப்போழ்தும் இவ்வண்ணம் ஸேவை ஏற்பட்டால் ஆறுதலாயும் ஆனந்தமாயு மிருக்குமே, ஆனால் எனக்கு இப்போதுதான் இது கிட்டியதென்று அவள் கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம்சொரியும். தனக்கு அதைக் காணக் கிடைக்காவிட்டாலும் இவளுக்கு இவ்வளவு பாக்கியமாவது தற்காலம் நேரிட்டதே யென்று தாய் ஒருவாறு ஆச்வாஸப்படுகிறாள்.

விசேஷக் குறிப்பு:—சுவாபதேசத்திலே—"இருள் தரும்மாஞாலத்துப் பிறவியைநான்வேண்டேன்" என்றவரான ஆழ்வார் பகவானைக் காணவேண்டுமென்று வெகுவாய் அலற்றியும், தூதுவிட்டும், அர்ச்சாவதார ரூபியாய்க் கோவில்கொண்டிருக்கின்ற பற்பல திவ்வியாலயங்களுக்கேகியும் ஆங்காங்குச் சில்லரைக்கடாக்ஷம் பெற்றாலும் அவனோடு பூர்ணகலவி, அதாவது, ஸம்பாஷணம்செய்தல் கடாக்ஷவீக்ஷணங்கள் பெறுதல் ஆலிங்கனாதிகளடைதல் ஒன்றும் கிடைக்காமற் போகவே இனிஇவ்வழிகள் தன்நோக்கம்ஸாதிக்கவல்லதன்றென்று கண்டுகொண்டார். இதன் பிறகேதான் எங்கேயாவதுபோய் ஏதாவது சுகிருதத்தைத் தேடத் தன்மனம்போலேஒருபோக்குப்போனார். அது திருக்கோளூருக்காயிற்று. இம்மனோநிலையைத்தான் முதல் பாசுரத்தின் அவதாரிகையில் விஸ்தரித்தோம். எந்த அர்ச்சாவதார மூர்த்திகளிலும் திவ்விய வடிவழகும் திவ்விய சக்தியையும் ஆழ்வார் அகக் கண்ணால் பார்த்து ஆநந்திக்கத் தக்கவராயினும்அது தமக்கு ஒவ்வாதென்று (அதாவது, தன்காதலடங்கப் போதாதுஎன்று) இதுவரையில் பற்பல இடங்களில் அவர் முறையிட்டதை நாம் கண்டுளோம். இப்படியெல்லாமிருக்க ஆழ்வாரின் அன்பர்கள், இதென்ன புதுச்சம்பவம், நெடுங்காலம் வரையில் ரஸமாயனுபவித்துவந்து அவற்றில் தனக்குப் பத்தியமாயுள்ள உருசி போதுமளவு கிட்டாததின் நிமித்தம் ஐந்தாம் பத்து இறுதியில் அவதார மகிமையில் ஒருவாறு ஊன்றித் தரித்தவர் அதுவும் சலித்து வழி புரண்டு யாது செய்வதென்று ஒன்று மறியாமல் திகைத்துத் தடமாடின இப்பெரியார் திடீரென்று பழையபடிபோலே திருக்கோளூரில் திருக்கோவில் கொண்டிருக்கும் அர்ச்சாவதார மூர்த்தியினிடத்தில் திவ்வியஸௌந்தரியத்தைத் திரும்பவும் மனமாரக்கண்டு ஆநந்த பாஷ்பம் தம் கண்களில் நிறைய அனுபவித்தாரே என்றும், ஆழ்வார் மனமுடையாமல் திரும்பவும் ஊரானாரே யென்றும் வியந்து அளவற்ற ஆறுதலும் உற்சாகமுமடைந்தாரென்பது அகப்பொருள். இதற்கடி இப்பத்தில் பிரஸ்தாபிக்கும் பிராட்டியின் தாய் "ஐயோ, என் மகள் பகவானிடத்திலுள்ள அதிக வேட்கையால் இது செய்யத்தகுந்தது இது செய்யத்தகாதது என்ற விவேகமில்லாமல் மனம் பதைத்துத் திகைத்துத் திருக்கோளூருக்குத் தனிமையில் சென்றாளென்று வருந்தியும் அங்கு எம்பெருமானின்றும் விசேஷ ஆதரவொன்றுங் கிட்டாதிருப்பின் மனம் நொந்து வாடுவாளே என்

செய்வதென்றும் பயந்தாள். முதலில் மனவருத்தமும் பிறகு பழியஞ்சலும் கடைசியில் தன்பெண் என்ன தீராததுயரத்துக்காளாவாளோவென்றும் நைந்து கசிந்தவள் இந்தப் பாசுரத்தில் தன்பெண் பகவானின் திவ்விய ஸௌந்தரியத்தி லீடுபட்டு ஆநந்தப்படுவாளென்று நினைத்து ஆறுதலடைகிறாள். ஆழ்வார் தம் மாநசாநுபவத்திற்குத் திருக்கோளூருக்கு ஏகுவானேன், எப்பொழுதும் அதேசிந்தனையுள்ளவரன்றோ என்ற சங்கைப்பட்ட நண்பர்போல் இப்பிராட்டியின் தாயும் அடுத்த ஒன்பதாம் பாசுரத்தில் மனிதர் சாதரணமா யநுபவிக்கும் போக்கிய வஸ்துக்களெல்லாம் என் கண்ணனுக்கென்று சொல்லாநிற்கும் என்பெண் திருக்கோளூருக்குப்போக அவசியமில்லாதிருக்கவும் ஊரார் பழிசொல்லித் தூற்றும்படி ஏன் போனளோ என்று வருந்துவதைக் காண்க.

வர்த்தமானம்

நாயின் அறிவு:-அமெரிக்கா காலிபோர்னியாவைச் சேர்ந்த பாப்பி தூர்ஹாம் என்பவரிடம் ஒரு நாய் இருக்கின்றது. அந்த நாய்க்குப் 'பாப்' என்று பெயர். அதனை அதன் சொந்தக்காரராகிய தூர்ஹாம் என்பவர் சமீபத்தில் இங்கிலாந்துக்கு அழைத்துக்கொண்டு சென்றிருக்கிறார். அந்த நாய் நம்மனத்தில் ஏதேனும் ஒன்றைச் சிந்தித்துக் கொண்டால் அதனை அறிந்து செய்துவிடுகின்றது. அதன் சக்தியைப் பற்றி விஞ்ஞானிகள் ஆராய்ச்சிசெய்து பார்த்தனர். இவ்வாறு பிறர் நினைத்ததைச் செய்யும்சக்தி அந்நாய்க் கிருப்பது ஆச்சரியமாயிருந்த போதினும், அந்நாய்க்கு 8 வயதுக் குழந்தைக் குள்ள அறிவு இருக்கின்றதென்று கண்டு பிடித்துக் கூறினர்.

அதன்சமர்த்தை நேரில் காணுவதற்காக "பீப்பிள்' பத்திரிகையின் பிரதிநிதியொருவர் சென்று அதனைப் பரீட்சித்தார். அவர் கூறியது வருமாறு:—

நான் பாப்பி தூர்ஹாம் வீட்டிற்குச் சென்றபோது பாப்பி வந்து தன் பாதத்தை என்னிடம் நீட்டியது. அதனை நான் பிடித்துக்கொண்டேன். உடனே அந்த நாய் என்னை மற்றோர் அறைக்கு அழைத்துக்கொண்டு போய் உட்கார வைத்தது. அங்கே நான் கார்டுபாக்கிலிருந்து நான்கு கார்டுகளை எடுத்துத் தரையில்வைத்துவிட்டு, அதில் ஓர் கார்டை என் மனத்தில் எண்ணிக் கொண்டேன். பாப் சிறிது நேரம் என்னையும் கார்டுகளையும் பார்த்துவிட்டு, இரண்டு நிமிஷங்கள் வரை தன்னிரு முன்கால்களிடையில் தன் தலையைவைத்துக் கொண்டு படுத்துக்கொண்டது. பிறகு எழுந்துபோய் நான் எந்தக் கார்டை நினைத்திருந்தேனோ அதனைத் தன் காலால் உதைத்து என் பக்கம் தள்ளியது. அது தான் நான் நினைத்த கார்டாகும். இதனைக்கண்டு ஆச்சரியமடைந்துவிட்ட நான் அந்நாய் எப்படி நான் எண்ணியதைத் தெரிந்துகொண்டுவிட்டது என்று அதன் மானேஜரைக் கேட்டபோது தமக்கொன்றும் அதுபற்றித் தெரியாதென்றும், அகஸ்மாத்தாக ஒரு நாள் தம் நாய்க்கு இச்சக்தி யிருப்பதைத் தாம்கண்டு கொண்ட தாகவும் கூறினார். அந்த நாய் குதிரைப் பந்தயக்காரர்கள் ஜாப்தாவி லிருந்து வெற்றி பெறுபவர்களின் பெயர்களையும் எடுத்துக் கொடுக்கிறதாம். இத்தகைய சக்தி அந்நாய்க் கெப்படி வந்த தென்பது மட்டும் கூறுவதற்கில்லை யென்று அவர் கூறுகிறார்.

பாப் 5 வயதடைந் திருந்த போது அதனைத் தமக்குக்கொடுக்கும்படி ஒருவர் 2000பவுன் விலை கொடுக்க முன் வந்தாராம். ஆனால், எந்த விஷயத்திற்காகவும் அந்த நாயைத் தாம் கொடுத்துவிட முடியா தென்று மிஸ்டர் தூர்ஹாம் கூறிவிட்டாராம்.

இறுதியாய், தூர்ஹாம் தம்முடைய கால்களைக் கொள்ளைகாரர்கள் கட்டிவிட்டுப் போய்விடுவதே போன்று நன்றாகக் கட்டிக்கொண்டார். அதன் பின் பாப் அவரிடம் சென்று அந்தக்கட்டை அவிழ்த்து விட்டுவிட்டது. இது மிகுந்த ஆச்சரியமான நாயே யாகும்.

* * *

கோலையைக் காட்டிக் கொடுத்த குரங்குகள்:—வங்காளத்தில் கோமில்லாவுக் கருகில் சிங்கர்பில் என்ற கிராமத்தில் வசித்துவந்த குரங்காட்டி ஒருவர் தாம் வளர்த்துவந்த இரண்டு குரங்குகளைக் கொண்டு ஆங்காங்குச்சென்றுவேடிக்கைகள்காட்டிவயிறுவளர்த்து வந்தார். சென்ற மாதத்தில் ஒருநாள் வேடிக்கை காட்டி விட்டு வீட்டுக்குத் திரும்புகையில் அந்தக் குரங்காட்டியை இரண்டு கொள்ளைக்காரர்கள் வழிமறித்து அவரைக் கொன்று அவரிடமிருந்த பணத்தை எடுத்துக்கொண்டு பிரேதத்தைஒருதனியிடத்தில் புதைத்து விட்டு ஓடிவிட்டனர். கொலையாளிகள் கைக்கத்தியைக் காட்டிக் குரங்குகளை பயமுறுத்திவிட்டார்கள். இவற்றையெல்லாம் குரங்குகளிரண்டும் மரத்தின்மீது ஏறிப் பார்த்துக்கொண்டிருந்தன. கொலையாளிகன் சென்ற பின் அவை கீழே இறங்கி அந்த இடத்தைப் பிறகு அடையாளம் கண்டுபிடிக்க அங்கு ஒரு மூங்கிற் கழியை நட்டுவிட்டுக் கிராமத்துக்குச் சென்று குரங்காட்டி வீட்டில் போய்க் கூக்குரலிட்டு அவருடைய மனைவியை அழைத்துவந்து பிரேதம் புதைக்கப்பட்ட இடத்தைக் காட்டின. உடனே போலீசாருக்குத் தகவல் அறிவிக்கப்பட்டது. அவர்கள் அங்கு வந்து பிரோதத்தைத் தோண்டியெடுத்தனர். பிராசிகியூஷன் தரப்பில் இந்தக் குரங்குகளிரண்டும் சாக்ஷிகளாகப் போடப்பட் டிருப்பதாகத் தெரிகிறது.

கிராமத்திற்குப் போலீசார் சென்று அங்குள்ள பலரை விசாரித்தனர். குரங்குகள் அந்தச் சமயத்தில் அங்கிருந்த இரண்டுபேரைக் கண்டதும் சீறிக் கோபத்துடன் அவர்கள் மீது பாய்ந்தன. உடனே போலீசார் அவர்களைக் கைதுசெய்து விசாரித்ததில் அவர்கள் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

எஜமானனிடத்தில் மிருகங்களுக்குள்ள விஸ்வாசத்துக்கு இது ஒரு அறிகுறி யாகும்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட.ச்யாவனப்ராசா — ம.ட.பிருங்காமலக.தைலம் — கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) ம.ட.டீ.மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ம.ட. ச்யாவனப்ராச. சிறந்த டானிக். சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்தசிற்றுமணக்கு எண்ணெ. காஸ்ட்ராலக்ஸ்
ஜ்வரேக் — எவ்வித ஜ்வரங்களுக்கும்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

கலா நிலயத்

தமிழ் வகுப்புக்கள்

கீழ்க்கண்ட இடங்களில் இப்பொழுது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

உடனே, அவைகளில் சேர்ந்துகொள்ளும்படி அனைவரும் வேண்டப்படுகின்றனர்.

1. சென்னை, எஸ்பிளனேட் Y. M. C. A. கட்டிடத்தில் செவ்வாய் வெள்ளிக் கிழமைகளில் மாலை 5-30 முதல் 6-45 வரையில்.
2. பெரம்பூர் கலவல கண்ணன்செட்டியார் பள்ளிக்கூடக் கட்டிடத்தில் திங்கள் வியாழக் கிழமைகளில், மாலை 6-30 முதல் 7-15 வரையில்.
3. சைதாப்பேட்டை, சேஷாசல முதலி தெரு, வித்யாசாகரப் பள்ளிக்கூடத்தில் புதன் சனிக் கிழமைகளில் மாலை, 7 முதல் 7-45 வரையில்.

ஆங்காங்குள்ளவர்களுக்கு இவ்விடயத்தை நம் கலாநிலய வாசகர்கள் தெரிவித்து அவர்களை இவ் வகுப்புக்களிலொன்றில் சேரும்படி செய்வார்களென்று நம்புகின்றோம்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., Managers.

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., Managers.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ளு ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்வின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.
ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்
இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

உயர்ந்த ஜாதி
பழமரக் கன்றுகள்
முறைப்படி வளர்க்கப்படுவன
பழமரங்கள் வைத்து வளர்ப்பதால் இலாபம்.
அவை உயர்ந்த ஜாதியாயிருக்கவேண்டும்.
ஜாதியின் சிறப்பு அவைகளை வளர்க்கும் முறைக்குத் தக்கபடி அமையும். உங்களுக்கு வேண்டிய பழச் செடிகளை தக்க இடத்தில் வாங்கத் தயங்காதீர்கள்.
விலையும் நயம்!
ஜாதியில் உயர்ந்தது! ஒருபோதும் கெடாதது!!
தென்னிந்தியா முழுவதும் பேரெடுத்தது
தேசாயின் பழச்செடி தினுசுகளே.
உங்கள் தோட்டம் தோப்புக்களுக்கு வேண்டியவைகளை வாங்குவதற்கு முன்பு தேசாயைக் கேட்டுத் தெரிந்து வாங்குவதே நன்மையும் இலாபமும் ஆகும் என்பதைத் தீர்மானமாய் வைத்துக்கொள்ளுங்கள்.
நேரிலாயினும் கடித மூலமாயினும் எது கேட்டாலும் தெரிவிக்கத் தயாராயிருக்கிறார். தேவகோட்டை ராம்நகர் எக்ஸ்டென்ஷனில் பழத் தோட்டங்களும் அலங்கார நந்தவனங்களும் அமைத்துத்தரவும் மேற்பார்வை செய்யவும் ஏற்றுக்கொள்வார்.
D. T. தேசாய்—பழமரம் பூஞ்செடி எக்ஸ்பர்ட்.
தேசாய் அண்டு கோ.,
17, க்ராஸ் ரோட் :: மல்லேச்வரம், பங்களூர்.
DESAI & Co., 17, Cross Road Malleswaram BANGALORE

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 53வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்!
இனும்!!
"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"
இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)